பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 10 சனிக்கிழமை (27-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 303

# தியாகி திலீபனின் நினைவில்
# நேற்று தமிழினம் மூழ்கியது!

## வடக்கு-கிழக்கு எங்கும் ஈகச்சுடரேற்றி மலர் அஞ்சலி

**தியாக தீபம் திலீபனின் நினைவில நேற்றுத் தமிழினம் மூழ்கியது. கடந்த 15ஆம் திகதியிலிருந்து திலீபனின் 16 ஆவது நினைவு தின அனுஷ்டானத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் மக்கள் நேற்று அதிகாலையிலேயே திலீபனின் படத்துக்கு முன்னால் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செய்யத் தொடங்கிவிட்டார்கள். தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு இந்த நிகழ்வு நடந்தது. பாடசாலைகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டபடியே நடந்தேறின. மாணவர்கள் உணர்வு கலந்த உற்சாகத்துடன் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். மாலையில் நடந்த பொதுக் கூட்டங்களில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்டனர்.**

தாயக மீட்புக்கும் தமிழினத்தின் உரிமை வாழ்வுக்குமாக தேசியத் தலைவர் பிரபாகரனின் வழி நடத்தலில் களமிறங்கி வெற்றிகள் பல கண்ட திலீபன், அஹிம்சைப் போர் முறைக்குத் திரும்பி தண்ணீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்துப் புது வரலாறு படைத்த வீரத் தியாகி தமிழ் மக்கள் நெஞ்சில் அணையாத தீபமாக இருந்து ஒளிபரப்பி வருகிறான்.

யாழ். குடாநாட்டில் பிரதான நிகழ்வுகள் நேற்றுக்காலை நல்லூரில் உள்ள திலீபனின் நினைவுத் தூபியில் ஆரம்பமாகின. கிழக்கிலும் முக்கிய நகரங்கள் அனைத்திலும் திலீபன் நினைவு தின நிகழ்ச்சிகள் நேற்றுக் காலை நடைபெற்றன. மாலையில் கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நல்லூரில் முற்பகல் 9.40 மணியளவில நிகழ்வு தொடங்கியதும் ஈகச் சுடரினை மாவீரர் ஒப்பிலாமணியின் தந்தை அன்ரன் நிக்கலஸ், மாவீரர் மேஜர் றஞ்சனின் தந்தை தம்பிராசா, மாவீரர் தும்பனின் தந்தை ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து திலீபனின நினைவுத் தூபிக்கு யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர்

(16ஆம் பக்கம் பார்க்க)



தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மலர் அஞ்சலி செலுத்துகிறார். (மேலும் படங்கள் 13ஆம் பக்கத்தில்)

## முழுக்குடாநாடும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,செப்.27

தமிழர் தாயக விடிவிற்காக தன்னுயிரை ஈந்த தியாகி திலீபனின் 16ஆவது ஆண்டு நினைவு தினநிகழ்வுகளையொட்டி யாழ். குடாநாடு முழுவதும் நேற்று ஸ்தம்பிதம் அடைந்தது.

யாழ். நகரம் உட்பட குடாநாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. முக்கிய [illegible], சந்திகள் என்பன சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் மஞ்சள், சிவப்பு வர்ணக்கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

யாழ். செயலகம் உட்பட அரச திணைக் (16ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியா தனது அணுகுமுறையினை மாற்றி தமிழர் அபிலாஷைக்கு மதிப்பளிக்க வேண்டும்

## திலீபனின் நினைவு நிகழ்வில் இளம்பரிதி உரை



யாழ்ப்பாணம்,செப்.27

இன்றைய சூழ்நிலையில் இந்தியா, தனது அணுகுமுறைப் போக்கை மாற்றி எமது மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

- இப்படித் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்று இரவு நல்லூர் ஆலய வீதியில இடம்பெற்ற தியாகி திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆசிரியர் சராபுவனேஸ்வரன் தலைமையில் நேற்றைய மாலை நிகழ்வுகள் இடம்பெற்றன. முன்னதாக பொது ஈகச் சுடரினை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் கலைவிழி, தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், மாவீரர் கிருஷ்ணாவின் மைத்துனர் பொ.கிருஷ்ணசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த க. சண்முகநாதன் மலர் மாலை அணிவித்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. அங்கு உரையாற்றிய சி. இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

நியாயமான கோரிக்கைகளையும் கொண்டிருக்கின்ற, எமக்கான அரசியல் அபிலாஷைகளைப் பெற்று வாழ விரும்புகின்ற - வாழத்துடிக்கின்ற - எமது மக்களை இந்தியா தனது அரசியல் அபிலாஷைகளுக்காகப் பலியாக்க நினைத்தது. அதற்காக எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டது. அவற்றை அனுபவித்தவர்கள், சுமந்தவர்கள், அவற்றுக்கு முகம் கொடுத்தவர்கள், வென்றவர்கள் எமது மக்களும், புலிகளும் தான்.

இன்று, 16 ஆண்டுகள் கடந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவினர் இன்று கிளிநொச்சிக்கு

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று கிளிநொச்சிக்கு [illegible] யம் செய்யவுள்ளனர். [illegible] புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர்கள் சந்தித்துப்பேச்சு நடத்துவர்.

## மட்டக்களப்பில் மற்றொருவர் சுட்டுக்கொலை

கொழும்பு,செப்.27

மட்டக்களப்பில் நேற்று மற்றொருவர் இனந்தெரியாத [illegible] சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் பற்றித்தெரியவருவதாவது:-

கல்முனை பாண்டிருப்புப் பகுதியில் வைத்து நேற்று இரவு 8 மணியளவில் வேலுப்பிள்ளை யோகேந்திரன் (வயது 39) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### காரைநகர் முகாமில்

# கடுமையான தண்டனையால் கடற்படைச் சிப்பாய் மரணம்

## அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.27

காரைநகர் கடற்படை முகாமுக்கு அருகில் உள்ள சிறுதீவு ஒன்றில் தண்டனைக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த கடற்படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரிகள் மீது வழக்குத் தாக்கல் செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த 4 சிப்பாய்கள் 1998ஆம் ஆண்டு சிறு குற்றத்துக்காக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து காரைநகர் முகாமுக்கு அருகில் உள்ள சிறுதீவு ஒன்றில் தண்டனைக்காக அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

உடற்பயிற்சி மற்றும் நல்லொழுக்க அறிவுரை வழக்குதல் என்பவற்றுக்காகவே அந்த அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டிருந்த நால்வரில் ஒருவரே கடுமையான (16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.சபையை மீளமைக்க பிரதமர் ரணில் பிரேரணை

## நேற்று தாம் அங்கே நிகழ்த்திய உரையில் முன் மொழிந்தார்

ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் குழு ஒன்று ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் சபையை ஒரு வருட காலத்தினுள் மீளமைக்கவேண்டும். இந்தப் பிரேரணையை ஐநா.பொதுச் சபையில் முன்மொழிந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நியூயோர்க்கில் உள்ள ஐநா. பொதுச்சபையின் 58ஆவது மாநாட்டில் நேற்று இலங்கை நேரப்படி 9மணியளவில் உரையாற்றுகையிலேயே பிரதமர் ரணில் மேற்படி பிரேரணையை முன்மொழிந்தார்.

ஐநா.சபையின் விசேட அமர்வு ஒன்றினை ஏற்பாடு செய்து, சபையின் அங்கீகாரத்துக்காக இந்தப் பிரேரணையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

பிரதமர் தனது உரையில் மேலும் கூறியதாவது:-

இன்று நிகழும் பல்வேறு விடயங்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய விதத்தில் ஐநா.சபையின் வியூகங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)



# கிழக்கு மாகாணத்திலும் நேற்று தியாகி திலீபன் நினைவு தினம்!

திருகோணமலை,செப்.27

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் 16ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன்னார் உட்பட வடக்கு, கிழக்கின் பெரும் பாலான பகுதிகளில் நேற்று அனுஷ் டிக்கப்பட்டது.

காலையில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமானதையடுத்து உண்ணாவிர தங்களும் மேற்கொள்ளப்பட்டன. மாலையில் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

திருகோணமலையில், புலிகளின் அரசியல் பணிமனையில் அமைக் கப்பட்ட விசேட மேடையில் நேற்றுக் காலை 9.30மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

தமிழீழ தேசியக்கொடியை, மாவட்ட மகளிர் அரசியல் பொறுப் பாளர் செல்வி காருண்யா ஏற்றினார். திலீபனின் உருவப் படத்துக்கு மேஜர் செங்கதிர்வாணனின் தாயார் திருமதி நடராசா தவமணி ஈகச்சுடர் ஏற்றினார். அதையடுத்து, மேஜர் தரேந்திரனின் உருவப்படத்துக்கு கடற்கரும்புலிக் கப்டன் சிவசுந்தரின் தந்தை சித்திரவேலாயுதமும் கேணல் சங்கரின் உருவப்படத்துக்கு லெப்.தாகூரின் சகோதரி கிருஷ்ண மூர்த்தி பிரபாணியும் சுடர் ஏற்றினர். பின்னர் வருகைதந்திருந்தோர் மல ரஞ்சலி செலுத்தினர்.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள், பாடசாலை சமூகத்தினர் எனப்பலரும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் தென்னவன் அங்கு உரையாற்றினார். அவர் தனதுரையில்:-

வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படுவதன் மூலமே நாம் சட்டப்படி தமிழ் மக் களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் நிறைவேற்ற முடி யும்.அதற்கான பேச்சுக்கள் இப் போது நடைபெற்று வருகின்றன. தற் போது அமைதி நிலவினாலும் எம் மால் எமது மக்களுக்குத் தேவை யான வசதிகளைச் செய்து கொடுகக முடியாதிருக்கிறது என்று கூறினார்.

கவிஞர் வ.விக்னேஸ்வரன் கவி தாஞ்சலி நிகழ்த்தினார்.

தம்பலகாமம், அன்புவழிபுரம், கப்பல்துறை, கிளிவெட்டி, கும்புறுப் பிட்டி, சம்பூர் ஆகிய இடங்களில் திலீபனின் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு-அம்பாறை மாவட் டங்களில் திலீபன் நினைவுதின நிகழ்வுகள் நேற்று பரவலாக நடை பெற்றன. பிரதான நிகழ்வு மட்டக் களப்பு கல்லாற்றில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு நகரில் புனித மைக்கேல் கல்லூரியில் திலீபன் நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற் றன. கல்லூரி அதிபர் அருட்சகோ தரர் ஜேம்ஸ் பீரிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு நகர கோட்ட அரசியல் பொறுப்பா ளர் சேனாதி, துணை அரசியல் பொறுப்பாளர் நியதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**கல்முனையில்**

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் (தேசியப் பாடசாலை) நேற்று நடைபெற்ற தியாகி திலீபனின 16ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு விடுதலைப் புலி களின் கல்முனைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ராஜ் குமார் உரையாற்றினார்.

கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரீபன் மெத்தியூ தலைமையில் நடை பெற்ற நிகழ்வின் ஆரம்பத்தில் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ராஜ் குமார் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து அக வணக் கம் செலுத்தப்பட்டது. கல்முனை நிர்வாகப் பொறுப்பாளர் முகுந்தன், பிரதேச பொறுப்பாளர் சஞ்சித்குமார், அதிபர் அருட்சகோதரர் ஸ்ரீபன் மெத்தியூ, பிரதி அதிபர் திருமதி ஸெய்வனேந்திரராசா உட்பட மாணவ, மாணவியர்களும் ஈகச்சுடர் ஏற்றி வைத்தனர்.

முன்னாள் நிர்வாகப் பொறுப்பா ளர் அறிவாழன், தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

ராஜ்குமார் உரையாற்றுகையில:-

'கடந்த ஒன்றரை வருடகாலமாக அமைதிச்சூழல் ஏற்பட்டு, கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தி, கல்வி அபிவிருத்தியில் நாம் பல வெற்றிக ளைக் கண்டு வருகின்றோம்.

எமக்குக் கிடைத்துள்ள இச்சந் தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது கல்வியையும், பொருளாதாரத்தை யும் மேம்படுத்துவதற்குப் பாடுபட வேண்டும். நாளை ஒரு நாள் நமக் குத் தமிழீழம் என்பது மலரப் போவது உண்மை'-என்றார்.

# கனடா வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை விஜயம்

## பிரதமர் ரணிலுடன் நியூயோர்க்கில் பேச்சு



கனேடிய வெளி விவகார அமைச சருடன் பிரதமர்.

கொழும்பு, செப்.27

கனடா வெளிவிவகார அமைச்சர் வில்லியம் கிரேம் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்ய விருக கிறார். கனடா அரசின் உதவியில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன் னேற்றத்தை அறிந்துகொள்ளவும் உதவி வழங்கக் கூடிய ஏனைய திட்டங்களை அறிந்துகொள்ளவுமே அவர் இலங்கை வரவிருக்கிறார்.

நியூயோர்க்குக்கு விஜயம் செய் திருக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத் திய விசேட சந்திப்பொன்றின் போதே கனடா அமைச்சர் தனது இலங்கை விஜயம் குறித்து தெரிவித்திருக்கிறார்.

இலங்கையில் நடந்து வரும் சமாதான முயற்சியின் முன்னேற்றம் குறித்துப் பாராட்டிய கனடா அமைச் சர், இம்முயற்சியால் நிரந்தர சமா தானத்தை அடைய வழிபிறக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித் தார்.

கனடா வழங்கும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் ரணில், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அர சியல் தீர்வு தேடுவதில் கனடாவின் சமஷ்டி முறை, இந்தியாவின் மாநில அரசுகள் முறை ஆகியவை குறித் தும் கவனம் செலுத்தி வருவதாக வும் கூறினார். (ஐ)

**யாழ்.கோவில் வீதி தாக்குதல் சம்பவம்:**

# வீடுகளைச் சேதப்படுத்தியோர் அதற்காக நஷ்டஈடு வழங்கினர்

யாழ்ப்பாணம்,செப்.27

அண்மையில் யாழ். கோவில் வீதியில் - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்துக்கு சமீபமாக உள்ள வீடுகள் சிலவற்றை தாக்கிச் சேதப்படுத்தியமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 9 எதிரிகளும் வீடுகளின் உரிமையாளர்களுக்கு 19 ஆயிரத்து 600 ரூபா நஷ்டஈடு வழங் கியுள்ளனர்.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம், எதிரிகளால் சேதமாக்கப்பட்ட மூன்று வீடுகளின் நஷ்டஈடு தொடர்பான அறிக்கையை பொலீஸார் சமர்ப் பித்தனர்.

இந்த அறிக்கையின் படி இரு வருக்கு தலா 5 ஆயிரம் ரூபாவையும் மற்றும் ஒருவருக்கு 9 ஆயிரத்து 600 ரூபாவையும் நஷ்ட ஈடாக எதிரிகள் வழங்கினர்.

எதிர்காலத்தில் இத்தகைய செயல் களில் ஈடுபடக்கூடாது என்று எச் சரித்து 9 பேரையும் நீதிவான் விடு வித்தார். (ஐ-3)

# புத்துலகப் பிரவேசக் கண்காட்சி நகரில் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,செப்.27

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறை திணைக்களம் நடத் தும் புத்துலகப் பிரவேசக் கண்காட்சி இன்று காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம் பமாகின்றது.

கைத்தறிப்புடைவைகள், கைப் புணிப்பண்டப்புக்கள், கைத்தொழில் பொருள்கள் என்பன கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படவிருக்கின் றன.

இன்று முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இக்கண்காட்சி இடம் பெறும்.

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் திருமதி க. சிவசிதம்பரம், ஆளுநரின செயலாளர் எஸ்.அமிர்தலிங்கம் ஆகி யோர் கலந்துகொள்கின்றனர்.

இக்கண்காட்சிக்கு புலம்பெயர்ந்த வர்களின் ஒத்துழைப்புக் கிட்டியுள் ளது என்றும் -

வடக்கு - கிழக்கு தொழில் துறைக்கு ஊக்கம் அளிப்பதாக இக் கண்காட்சி அமையவிருக்கிறது என்றும் - கைத்தொழிற்றுறைப் பணிப் பாளர் கி.விஸ்வலிங்கம் தெரிவித் தார்.

தொழிற்றுறையை ஊக்குவிப்பது, இலைமறைகாயாக உள்ள திறமை மிக்கவர்களை இனம் காண்பதும் அவர்களது தொழில் நுட்பங்களை வெளிக்கொணடுவருவதும், உற் பத்திப்பொருள்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதும், தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதும் இக் கண்காட்சியின் நோக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

கண்காட்சியைப் பார்வையிட பாடசாலைச் சீருடையுடன் வரும் மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக் கப்பட்டது. (ஐ-147)

# கண்டியிலிருந்து இன்று பாதயாத்திரை ஆரம்பம்

கண்டி,செப்.27

தேசாபிமான தேசிய இயக்கம் ஒழுங்கு செய்திருக்கும் சமாதான எதிர்ப்புப் பாதயாத்திரை இன்று காலை 8 மணிக்கு கண்டியிலிருந்து ஆரம்பமாகும்.

பிரிவினைவாதத்துக்கு, தேசிய கலாசார உரிமைகளை அழிப்பதற்கு, தேசியப் பொருளாதாரத்தை அந்நியர் வசம் ஒப்படைப்பதற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டவே இப்பாத யாத்திரை நடத்தப்படுவதாக ஏற் பாட்டாளர்கள் கூறுகிறார்கள்.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தை பாதயாத்திரிகர்கள் வந் தடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் ஒன்று நடத்தப்படும். 29 ஆம் திகதி மாலை பாதயாத்திரை நிட்டம்புவ நகரை வந்தடைந்ததும் அங்கும் பொதுக் கூட்டமொன்றை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, இப்பாதயாத்தி ரையில் பங்குபற்ற விரும்பும் சுதந்தி ரக்கட்சி எம்பிக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுமதி வழங்கியிருக்கி றார் என அறியப்படுகிறது. (ஐ)

# ஆதரவற்ற வயோதிபர் யாழ். சிறையில் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.27

காங்கேசன்துறையில் வைத்து படையினரால் பராமரிக்கப்பட்டு வந்தவர் எனக் கூறப்படும் வயோதி பர் ஒருவர் யாழ். சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

காங்கேசன்துறையில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த சமயம், அங்கு தனியாகக் கைவிடப்பட்ட பொன்னையா கந்தசாமி (வயது 80) என்ற வயோதிபர் பின்னர் அங்கு இராணுவத்தினரின் நீண்டகாலப் பராமரிப்பில் தங்கி வாழ்ந்து வந்தார்.

சித்தசுவாதீனமற்ற நிலையிலும் வயது முதிர்ந்த நிலையிலும் அவர் இருந்ததை அடுத்து அவரைப் படை யினர் காங்கேசன்துறைப் பொலீ ஸாரிடம் கையளித்திருந்தனர். அவ ரைப் பின்னர் மல்லாகம் நீதிவான் முன் பொலீஸார் முற்படுத்தினர்.

அந்த வயோதிபர், ஆதரவற்று இருப்பதால் அவரைக் கைதடி வயோ திபர் மடத்தில் வைத்துப் பராமரிக்க அனுமதிக்குமாறு பொலீஸார் நீதி வானிடம் கோரினர்.

வயோதிபர் இல்ல நிர்வாகத்து டன் தொடர்புகொண்டு அதற்கு ஏற்பாடு செய்யும்படியும் -

அதுவரை இவரை யாழ். சிறைச் சாலையில் வைக்கும் படியும் - நீதி வான் உத்தரவிட்டார். அதன்படி யாழ். சிறையில் வைக்கப்பட்டிருந்த சமயமே நேற்றுமுன்தினம் அவர் மரணமானார். (ஐ-3)

**சிறுவர்தின நிகழ்ச்சிகள்**

சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலைய அமைப்புக்குழு நடத்தும் சிறுவர்தின நிகழ்வுகள் எதிர் வரும் முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். வீரசிங் கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-5)

**கருத்தரங்கு**

கிராமியத் துறைசார் பெண்களுக கான கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீர்வேலியில் உள்ள வேத வல்லி கந்தையா நினைவுமண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் சமூக அபி விருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன், மகளிர் அபி விருத்தி நிறுவத் தலைவி திருமதி சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரையாற்றுவர்.

இந் நிகழ்வில் கோப்பாய் பிர தேசத்தின் சிறந்த விவசாயிகள் சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.



ஐ.நா. கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.நா.பொதுச் செயலர் கோபி அனானை நேரில் சந்தித்துப் பேசியபோது எடுக்கப்பட்ட படம்.

# குளவிகள் தாக்கியதினால் வயோதிபர் பரிதாப மரணம்

மண்டைதீவு,செப்.27

கரும் குளவிகள் பயங்கரமாகக் கொட்டியதில் மண்டைதீவில் வயோ திபர் ஒருவர் நேற்றுமுன்தினம் மரணமா கினார்.

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சி.தர்மலிங்கம் (வயது 75) என்பவரே இப்படிப் பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

பிற்பகல் நேரம் ஒழுங்கையால் இவர் வந்து கொண்டிருந்தபொழுது அயல் வளவில் இருந்து பனையோலை ஒன்று வீதியில் வீழ்ந்ததாகவும் -

அதில் இருந்த குளவிக் கூட்டில் இருந்து வெளிவந்த குளவிகள் இவ ரது தலை, முகம் ஆகிய பகுதிகளில் கூட்டம் கூட்டமாகத் தாக்கியதாக வும் -

குளவிகளிடம் இருந்து தப்புவ தற்காக மணல் மண்ணை வாரி உடல் முழுவதும் இறைத்த போதும் இவரால் தன்னை பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை என்றும் -

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

அயலவர்களால் மீட்கப்பட்ட இவர், யாழ். போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்படுகையில் இடை வழியில் மரணமானதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-80)


# காந்தீயம் வென்ற காவியநாயகனுக்கு மக்கள் துதி....
















# வீசியெறியப்படும் உணவுக்காகப் போட்டியிடும் யானைகள்

தாரணி

ஏறக்குறைய இரண்டு கோடி மக்கள் வாழுகின்ற இலங்கையில் தற்போது வசிக்கும் யானைகளின் எண்ணிக்கையோ வெறும் 3ஆயிரம்தான். யானைகள் வாழும் காடுகள் அழிந்து வருவதால் அவை உணவு தேடிக் கிராமங்களுக்குப் படை எடுக்கின்றன. அங்கே கழிவுப்பொருள்கள் வீசி எறியப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் தமது உணவைத் தேடி அலைகின்றன. பரிதாபத்துக்குரிய இந்தப் பிரம்மாண்ட ஜீவன்கள்.

இலங்கையில் யானைகளுக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பரிதாப நிலை ஒன்றும் புதிதல்ல. ஐக்கிய நாடுகளின் அறிக்கையின்படி கடந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஆசியாக் கண்டத்தில் பல்லாயிரக் கணக்கில் காணப்பட்ட யானைகள் தற்போது வெறும் 16 ஆயிரமாகக் குறைந்து 11நாடுகளில் மட்டுமே காணப்படுகின்றன.

இதிலும், பெரும்பாலான யானைகள் மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையிலேயே உள்ளன. தாய்லாந்தில் அவை பிச்சை எடுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மியன்மாரிலோ (முன்பு பர்மா) அவை காட்டு மரங்களை இழுத்துச் செல்லப் பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த காலப் போரின் கொடுமைகளிலிருந்து சிறிது சிறிதாக மீண்டு கொண்டிருக்கும் கம்போடியாவில் காணப்படும் யானைகளின் எண்ணிக்கையோ வெறும் 400 மட்டுமே. அதில் 250 யானைகள் காட்டில் வாழுகின்றன. மிகுதி 150இற்கும் குறைவான எண்ணிக்கையுடைய யானைகள் மனிதனால் பழக்கப்பட்டவையாக உள்ளன.

ஆசிய யானைகளையும் அளவில் பெரிய உருவமுடைய ஆபிரிக்க வகை யானைகளையும் பாதுகாக்கும் நோக்கில் உலகெங்கிலும் இருந்து வந்த 150 பேர் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த 19ஆம் திகதி இலங்கைத் தலைநகர் கொழும்பில் மூன்று நாள் மாநாடொன்றை நடத்தியது. இந்த மாநாடு அமெரிக்காவில் அமைந்திருக்கும் 'சர்வதேச யானைகள் பாதுகாப்பு அமைப்பின்' அனுசரணையுடன் நடத்தப்பட்டது.

இலங்கையில் புராதன சின்னங்களுக்குப் பேர் பெற்ற பழைமை வாய்ந்த நகரான பொலன்நறுவையின் அருகில் காணப்படும் குப்பைத் தொட்டிகளில் உணவுதேடிக் கொண்டிருந்த யானைகளைக் கண்ட, இலங்கை வாசிகளும் இங்கே வருகை தந்திருந்த சூழலியலாளர்களும் பேரதிர்ச்சி அடைந்தார்கள்.

மூன்று கால்களில் நின்றபடி, தனது இடது முன்னங்காலைப் பயன்படுத்தி 'பிளாஸ்ரிக்' குப்பைப் பை ஒன்றை உதைபந்து ஆடுபவர்களைப் போல் உதைத்து கீழே தள்ளியது. ஐந்து தொன் எடை கொண்ட பெரிய யானை ஒன்று குட்டைப் பையைத் திறந்ததுதான் தாமதம் அங்கே கூடியிருந்த மற்ற யானைகளும் குப்பைப் பை விருந்தை சுவைக்க ஆரம்பித்துவிட்டன. இது போதாதென்று சுற்றி நின்ற பசுக்களும் தமது பங்கிற்காகப் போட்டியிட்டன. பழைய சோறு, கறி, அழுகிய பாண், சமைத்த மரக்கறிகள், பழங்கள், பச்சைமிளகாய்கள் என விருந்து மிகவும் அருமையாக இருந்தது. வீசி எறியப்பட்ட பூமாலைகள் கூட யானைப் பசிக்கு விருந்தாகின. 'உங்களை, உங்கள் வீட்டிலிருந்து பலவந்தமாக அடித்துத் துரத்தி சாப்பாட்டிற்கே வழியில்லாமல் செய்தால் பிச்சை எடுப்பதைத் தவிர வேறு என்ன தான் உங்களால் செய்யமுடியும்?' எனக் கேள்வி கேட்டார் பொலன்நறுவை நகரின் அருகிலுள்ள குக்கிராமத்தைச் சேர்ந்த எஸ்.ஏ.எம்.சலீம் என்ற கிராமவாசி. இருப்பினும், சில வழிகளில் யானைகள் இங்கே கௌரவிக்கப்படுகின்றன. பௌத்தர்கள் அதிகம் வாழும் இலங்கையில், அலங்கரிக்கப்பட்ட யானைகளின்றி எந்தவொரு சமய நிகழ்வுகளும் முற்றுப் பெறாது. ஆனால், இது கூட இலங்கையில் அருகிவரும் காடுகளால் சுருங்கி விடும் யானைகளின் எண்ணிக்கையைப் பாதுகாக்க உதவவில்லை. 1956ஆம் ஆண்டில் இலங்கையின் 44சத வீதம் காடுகளால் சூழப்பட்டிருந்தது. ஆனால், இன்றோ காடுகளின் நிலை தலைகீழாகிவிட்டது. தற்போது 27 சதவீதமான காட்டுப்பிரதேசங்களே எஞ்சியிருக்கின்றன.

ஒரு நூற்றாண்டுக்கு முன் இந்தியாவின் தென்முனையில் அமைந்திருக்கும் இந்தத் தீவின் காடுகளில் பத்தாயிரம் தொடக்கம் பதினைந்தாயிரம் வரையான யானைகள் சுற்றித் திரிந்தன. இன்று இலங்கையின் காடுகளில் வசிக்கும் யானைகளின் தொகை மூவாயிரம் மட்டுந்தான். மேலும் ஐந்நூறு காட்டு யானைகள் பழக்கப்பட்டு பௌத்த ஆலயங்கள், சரணாலயங்கள் மற்றும் தற்காலிக வாழிடங்களில் வசிக்கின்றன.

'யானைகளின் வாழிடங்கள் சுருங்கி வருகின்றன. அதனால் அவை உணவைத்தேடி அலையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு கிடைக்கும் உணவுகளும் அவற்றிற்கு தீங்கு விளைவிப்பனவாகவே உள்ளன.'- இவ்வாறு கூறுகிறார் வனவாழ் உயிரினங்கள் தொடர்பான திணைக்களத்தின் பிரதி இயக்குநர் எட்மன் வில்சன்.

இலங்கையின் மத்திய பகுதியை மட்டக்களப்பு நகருடன் இணைக்கும் நெடுஞ்சாலையின் அருகிலேயே இந்தக் குப்பைகள் குவிக்கப்படும் இடம் அமைந்துள்ளது. யானைகள் அவற்றிலிருந்து உட்கொள்ளும் உணவுடன் உள்ளே செல்லும் பிளாஸ்ரிக் பைகள் அவற்றுக்கு மூச்சுத் திணறலை ஏற்படுத்தக்கூடியவை. மருத்துவமனை கழிவுகளும் இங்கே கொட்டப்படுவதால் ஊசிகள் மற்றும் கண்ணாடிப் போத்தல்களால் யானைகள் பாதிக்கக்கூடிய அபாயம் உள்ளது. காயங்களுக்குக் கட்டுப்போட்ட துணிகளும் வீசப்படுவதால் நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன.

ஆத்திரமுற்ற விவசாயிகளால் சுடப்பட்டு அல்லது மின்சாரத்தால் தாக்கப்பட்டு இறக்கும் யானைகள், தொற்றுநோய்கள் அல்லது நோய்களால் தாக்கப்பட்ட நிலையில் சிகிச்சை அளிக்கப்படாமல் இறக்கும் யானைகள் என வருடாந்தம் - அவசியம் இல்லாமல் - இலங்கையில் 150 யானைகள்வரை இறந்துபோகின்றன.

பொலன்நறுவை நகரின் குப்பைகளை உண்ணுவதென்பது யானைகளுக்குத் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இவ்விடயத்தில் அரசு எதுவும் செய்யமுடியாத நிலையிலேயே உள்ளது. இப்பகுதி யானைகள் வாழும் காட்டின் எல்லைப் பிரதேசத்தில் இருப்பதால், இங்கே குப்பைகள் கொட்டுவதை நிறுத்தவேண்டும் என உள்ளூர் நகர சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. பொலன்நறுவையிலுள்ள இப்பகுதி, உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இடமாக தற்போது மாறிவிட்டது. தினமும் காலை வேளைகளில், உணவுதேடி இங்கே வரும் எட்டு முதல் பத்துவரையான எண்ணிக்கையைக் கொண்ட யானைக் கூட்டங்களை படம்பிடிப்பதற்காக, உல்லாசப்பயணிகள் இங்கே கூடிவிடுகிறார்கள். குப்பைகளைச் சுமந்து வரும் உழவு இயந்திரங்களின் இரைச்சலைக் கேட்டதும், யானைகள் உணவுண்பதற்குத் தயாராகிவிடுகின்றன. ஆயினும், யானைகளின் விருந்து காலை பத்து மணிக்குத்தான் ஆரம்பமாகின்றது. அப்போதுதான உணவு விடுதிகளிலிருந்து குப்பைகள் எடுத்துவரப்படுகின்றன. உணவு மேசையில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களில் எந்தப் பாத்திரத்தில் என்ன சாப்பாடு இருக்கும் என்று எமக்குத் தெரிவதுபோல், குப்பைகளை ஏற்றிவரும் உழவு இயந்திரங்களில், எந்த உழவு இயந்திரத்தில் என்ன சாப்பாடு இருக்கும் என்பதை யானைகள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றன.

யானைகள் நல்ல புத்திக்கூர்மை உடைய விலங்குகள் ஆகும். தற்போது இருக்கும் நிலத்தில் வாழும் விலங்குகளில் மிகவும் பெரிய விலங்கான இதை நமது அடுத்த சந்ததியினரும் பார்க்கவேண்டுமாயின், அழிந்துவரும் நிலையிலுள்ள யானைகளை பாதுகாப்பது நம் அனைவரதும் கடமையாகும். யானைகள் இயல்பாகவே எவருக்கும் தீங்கு செய்வதில்லை. அந்த இனம் தீங்கு செய்யாததாலேயே அழிந்து வருகிறது என்ற கருத்தும் நிலவுகிறது. இது நல்லவர்களுக்கு காலம் இல்லை என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது.

## கண்ணீர் அஞ்சலி

வட்டு. தெற்கு கிராமிய உத்தியோகத்தர்
திரு.சீ.நாகரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் ச.சீனிவாசகம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*சங்கானை.* (23036) (22-11-14)
பணியாளர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### சண்முகம் பாலசுந்தரம்

வரணி வடக்கைச் சேர்ந்த சண்முகம் பாலசுந்தரம் 24.09.2003 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - சிவமணி தம்பதியினரின் அன்பு மகனும் பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌசனா, தாருஷன், ஆர்த்தனா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராஜா(பிரான்ஸ்), தேவராஜா, சிவாஜினி (லண்டன்), ஜெயராஜா(பிரான்ஸ்), காலஞ்சென்ற தவராஜா, ராஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும் லட்சுமி அம்மா(பிரான்ஸ்), விமலா தேவி, பிரேமதாசன்(லண்டன்), சுகந்தி(பிரான்ஸ்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் திருமதி சிதம்பரத்தின் பேரனும் சந்திரசேகரம் - பரமேஸ்வரி தம்பதியினரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2003) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*வரணி வடக்கு, வரணி* (23038) (11-14) வி. ரவீந்திரன் (சகலன்)

### திருமதி ஈஸ்வரோதயம் சாரதாதேவி

கொக்குவில், நந்தாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாரதாதேவி ஈஸ்வரோதயம் நேற்று (26.09.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற மார்க்கண்டு சின்னத்தம்பி - இரத்தினம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் - வனிதவதி ஆகியோரின் அன்பு மருமகளும் ஈஸ்வரோதயம் (ஈஸ்வரன்-மின்சாரசபை, சுன்னாகம்) அன்பு மனைவியும் சனோபன், டினோசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரராசா(ஓய்வுபெற்ற உப அதிபர்), கனகராணி (பிரான்ஸ்), பத்மாவதி (கனடா), சரோஜினிதேவி, சந்திரலேகா (இந்தியா), கருணாரூபி, இந்துமதி(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராஜன், வோஷிங்ரன், சண்முகநாதன், புஸ்பபதி, பரமேஸ்வரி, முருகையா, செல்வராசா, காலஞ்சென்ற குமாரசாமி, நகேந்திரன், பாக்கியராசா, விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2003) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நந்தாவில் கிழக்கு,* சி.சந்திரராசா
*கொக்குவில்.* (23039) (11-14) (சகோதரன்).


## வீடு விற்பனைக்கு

யாழ்.கச்சேரிக்கு அருகில் புகையிரத வீதிப் பக்கமாக அமைந்துள்ள 04 படுக்கை அறையுடன் சகல வசதிகளும் உள்ளடக்கிய வீடு 02 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
*பார்வையிடும் நேரம்: காலை 9–12 மணி வரை மாலை 3–7 வரை*
தொடர்பு : இ.சீவரட்ணம்
17/3 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0776158074
(23035)

## லஷ்சுமி சினிமா
இணுவில்
அருண், தீபு, வடிவேல், விஜயகுமார் இன்னும் பலர் நடிப்பில்
அன்பு
(ரீல்ஸ்)
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(23037)

## ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன், ஸ்ரீமான் நடித்த
ராமச்சந்திரா
காட்சிகள் :- 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C/29904)

## நிறைஞ்சனாஸ்
அஜித், லைலா நடித்த
தீனா
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
ULTRA FORCE 2
இரவு 8.45 (பி.நே.)

## நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று முதல் (27.09.2003) விக்ரம், திரிஷா, விவேக் மற்றும் பலர் நடிப்பில்
(ரீல்ஸ்)





சாமி
காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/29908) (11-14)


## நல்லூர் பிரதேச சபை
## ஆதனவரி அறிவித்தல் - 2003
### நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

**2003ஆம் ஆண்டு 3ஆம் கந்தாயத்துக்கான ஆதன வரியை 30.09.2003ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக கீழ் விவரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.**

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - 15 % |
| ஏனைய காணிகள் | - 20 % |

**நிலுவை உட்பட 2003ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 134 (5) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.**

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.*
*26.09.2003*
செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்
(C/30385) (22-11-14)

# உதயன்

## பொய்ப் பிரசாரங்களுக்கு எதிராக மறு பிரசாரம்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுக்கள் மற்றும் சமாதான நடவடிக்கைகள் குறித்து நாடு தழுவிய ரீதியில் புதிய பிரசார இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

அரசு இவ்வாறு தீர்மானித்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும், சமாதானப் பேச்சில் பங்குபற்றும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் குழுவின் தலைவருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கின்றார்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராகத் திட்டமிட்ட வகையில் - வேண்டுமென்றே - சில சக்திகளினால் பொய்ப் பிரசாரங்கள், வீண் வதந்திகள் என்பன பரப்பப்பட்டு வருகின்றன. இத்தகைய பசப்புரைகள்- பரப்புரைகள்- நாட்டின் அமைதி நிலையை மிக மோசமாகப் பாதிப்புறச் செய்யக்கூடியன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அமைதிப் பேச்சுக்கள் மூலம் நாட்டில் சமாதான சூழ்நிலை - இணக்கத் தீர்வு- எட்டப்படுவதை விரும்பாத சக்திகளும் -

அதிகாரப் பரவலாக்கல் மூலம் சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதையும், அதன் மூலம் இனங்களுக்கு இடையில் இணக்க நிலை ஏற்படுவதையும் விரும்பாத பேரினவாதிகளும் -

இத்தகைய உணர்வுகளைத் தூண்டும் பிரசாரங்களுக்குப் பின்னணி என்பது கண்கூடு.

இரண்டு தசாப்த காலமாகக் கொடூர போர்புரிந்த இரு தரப்புகள், யுத்தத்தை நிறுத்தி, பேச்சு மேசையில் அமர்ந்து, அமைதி வழியில், சமாதானத் தீர்வு காண இணங்கியிருக்கின்றன. இந்த இணக்கத்தின் மூலம் பிணக்கிற்கு சுமுகத் தீர்வுகாண வேண்டுமானால் இரு தரப்பிலும் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்புகள், புரிந்துணர்வு, நல்லெண்ணச் செயற்பாடுகள் போன்றவை வெளிப்படுத்தப்படுவது அவசியம்.

இரு தரப்புத் தலைவர்களிடையேயும் அதற்கான உறுதிப்பாடும், துணிவும், அர்ப்பணிப்பும், மனோதிடமும் உள்ளன.

என்றாலும் அரசுத் தரப்பைப் பொறுத்தவரை இது விடயத்தில் அது பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பது கவனிக்கத்தக்கது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சியில் இருந்தாலும் நிறைவேற்று அதிகாரம் எதிர்த்தரப்பைச் சேர்ந்த ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில். முப்படைகளையும் கட்டுப்படுத்தும் தளபதி தாமே என்ற முனைப்பில் அவரது செயற்பாடுகள்.

இதுதவிர, படைத்தளபதிகள் பலர் பிரதமர் ரணிலின் பின்னால் இல்லை. பிரதமர் எடுக்கும் சமாதான முன்முயற்சிகளுக்கு - அமைதிப் பாதை வழிமுறைக்கு - இணங்கிவர மறுத்து, முரண்டுபிடிக்கும் நிலையில் அவர்களின் பலரின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

மேலும், நாடாளுமன்றத்தில் ஒரேயொரு பெரும்பான்மை ஆசனத்துடன் ஆட்சியைத் தக்க வைத்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால், சமாதான முயற்சிகளுக்கு உத்வேகம் ஊட்டும் - காத்திரமான- நடவடிக்கைகளை நாடாளுமன்றம் மூலம் மேற்கொள்வதற்குப் போதிய நாடாளுமன்றப் பலம் இல்லாத நிலை.

இவ்வாறு சமாதான முயற்சிகளை முன்நகர்த்தும் அர்ப்பணிப்பும் உறுதிப்பாடும் இருந்தும், அதனைச் செய்ய முடியாது தடுமாறுகின்றார் பிரதமர் ரணில்.

இந்தத் தடுமாற்ற நிலையைச் சரியான வாய்ப்பாக பயன்படுத்தி சமாதான முயற்சிக்குத் தடுக்குப் போட்டு, அவற்றை முறியடிக்க பேரினவாதிகளும், சமாதான முயற்சிகளுக்கு எதிரான சிங்களத் தீவிரப்போக்கு அணியினரும் முனைப்பாக நிற்கின்றனர்.

சமாதான நடவடிக்கைகளுக்கு ஆப்பு வைக்கும் அவர்களின் வீண் வதந்தி, பொய்ப் பிரசாரத் தகவல்களே இப்போது இறக்கை கட்டிப் பறக்கின்றன.

அவற்றுக்குப் பதிலடியாகவே - உண்மை நிலையை மக்களுக்கு உரைக்கும் விதத்தில் - பெரும் பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசு முடிவுசெய்திருக்கின்றது.

மீண்டும் யுத்தம் வெடித்தால் திருகோணமலைத் துறைமுகத்துக்கும் கடற்படைத் தளத்துக்கும் பேராபத்து ஏற்படும். யாழ்.குடாநாட்டைப் புலிகள் முழுவதுமாகக் கைப்பற்றிவிடுவார்கள். கொழும்புக்குள் ஆயிரக்கணக்கான புலிகள் ஊடுருவியிருப்பதால் தலைநகரின் நிலை அதோகதிதான் - என்ற சாரப்பட அண்மைக் காலத்தில் பரப்பப்பட்டு வரும் பொய்யுரைகள் இப்படித்தான் இறக்கை கட்டிப் பறக்கின்றன.

அரசு செயற்படுத்த உத்தேசிக்கும் பிரசார இயக்கம், இத்தகைய பசப்புரைகளுக்கு நல்ல பதிலடியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வீதி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், பொதுக்கூட்டங்கள், கவரொட்டிப் பிரசாரங்கள் போன்ற பல்வேறு வழிமுறைகள் மூலம் சமாதான முயற்சிகளின் உண்மைநிலை குறித்து மக்களுக்கு விளக்கப்படும் என்கிறார் பேராசிரியர் பீரிஸ்.

இத்தகைய பிரசாரம் சிங்களப் பேரினவாதிகளின் காதுகளில் விழுமா? அவர்கள் திருந்துவார்களா? என்பதையெல்லாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# தவறிழைக்கும் மருந்தகங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை!

## சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.27

குடாநாட்டில் முறையற்ற விதத்தில் மருந்து விற்பனையை மேற்கொள்ளும் மருந்தகங்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சுகாதார சேவைகள் மாகாண பதில் பிரதிப்பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

அநேகமான மருந்தகங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே அவர் மேற்கண்ட அறிவித்தலை விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வைத்தியர்களால் வழங்கப்படுகின்ற மருந்துச் சீட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மருந்துகளுக்குப் பதிலாக சில சந்தர்ப்பங்களில் காலாவதியான, பதிவுசெய்யப்படாத மற்றும் தவறான மருந்துகள் நோயாளர்களுக்கு வழங்கப்படுவதாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு விற்பனை செய்வதால் நோயாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் - இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் - உரிய மருந்தகங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். அக்குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டால் அவற்றின் வியாபார அனுமதி இரத்துச் செய்யப்படும். அத்துடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந்த மருந்தகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் இது விடயம் தொடர்பாக பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு தமது முறைப்பாடுகளை தெரிவிக்கலாம். அவ்வாறு தொடர்புகொள்ளும் போது வாங்கிய மருந்துகள் அதற்கான பற்றுச்சீட்டு, வைத்தியரால் வழங்கப்பட்ட மருந்துச்சீட்டு ஆகியவற்றை எடுத்து வருவது பயனுள்ளதாக இருக்கும்.

தகுதிவாய்ந்த மருந்தாளர்கள் பணியாற்றும் மருந்தகங்களில் நோயாளர்கள் மருந்துகளை வாங்குவது பயனுள்ளதாகும். அத்துடன், தயாரிப்பு மற்றும் காலாவதித் திகதிகள் குறிப்பிடப்படாத மருந்துகளை வாங்காது இருப்பது பாதுகாப்பானதாகும். அத்துடன், மருந்துகளை வாங்கியதற்கான பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வது அவசியமாகும். என்று அவர் தெரிவித்தார். (ஓ-10)

# நகரின் திறந்த சந்தையில் சுகாதாரம் பேணி உதவுக!

## மாநகர ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்நகர திறந்த சந்தைப்பகுதி சுகாதாரத்தைப் பேணுவதற்கு வாடகைதாரர்கள் மற்றும் சந்தை வாடிக்கையாளர்கள் ஒத்துழைக்கவேண்டுமென யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆணையாளர் இதுதொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகர திறந்த சந்தைச் சூழலில் அண்மைக்காலமாக பெருமளவு கழிவுப்பொருள்கள் கொட்டப்பட்டுவருகின்றன.

வியாபாரிகளும் பொதுமக்களும் தாம் பயன்படுத்திய மற்றும் கழிவுப்பொருள்களை ஆங்காங்கு கொட்டிவருகின்றனர். பிரத்தியேக குப்பை வாளிகள் வைக்கப்பட்டுள்ள போதிலும் கழிவுகள் அதனுள் இடப்படுவதில்லை.

நிலத்தில் வீசப்படும் பொலித்தீன் மற்றும் இதர கழிவுகள், கழிவுநீர் வாய்க்கால்களை அடைத்து அதன் ஓட்டத்தை தடை செய்து விடுகின்றன. இது சந்தைப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதற்கும் ஏதுவாகிறது.

மேலும் சந்தை மலசலகூடத்தை சந்தை வியாபாரிகள் சிலர் தமது குளியல் அறையாகப் பயன்படுத்துகின்றனர். இதனால் கழிவு நீர்க்குழி சில நாள்களிலேயே நிரம்பிவிடுகிறது. யாழ் மாநகர சபையிடம் இருப்பதோ ஒரேயொரு பழைய நீர் அகற்றும் இயந்திரம் அத்துடன் சனநெருக்கடி நிறைந்த பகுதியில் இந்தச் சுத்திகரிப்பு வேலைகளை அடிக்கடி மேற்கொள்ளவும் முடியாது.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு இரவு வேளைகளில் மலகூடத்தை பூட்டிவிட்டால் வெளிச் சந்தைப் பிரதேசம் அசுத்தமாக்கப்படுகிறது. இக்காரணங்களால் எமது சுகாதாரப் பிரிவினர் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். இந்த நிலைமையில் பொது மக்கள் எமக்கு ஒத்துழைப்புத்தரவேண்டும் - இப்படி ஆணையாளர் தெரிவித்தார். (எ-9)

# திறந்த பல்கலை அலுவலகத்திற்கு கைதடிப்பகுதியில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,செப்.27

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம் கைதடிப் பகுதியில் அமைக்கப்படவிருக்கிறது.

கொக்குவில், பிறவுண் வீதியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் தற்சமயம் இப்பிராந்திய நிலையம் இயங்கி வருகிறது.

சகல வசதிகளுடன் கூடிய கட்டடத்தை இந்தப் பிராந்திய நிலையத்துக்காக மூன்று கோடி ரூபா செலவில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையத்தை அமைப்பதற்கு தேவையான இடத்தை தெரிவுசெய்யும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன. தற்சமயம் கைதடிக்கும் அரியாலைக்கும் இடைப்பட்ட இடம் ஒன்று இதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கல்வியமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் காசிம், இடைநிலைக்கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் இந்தப் பிராந்திய நிலையத்துக்கான கட்டடத்தை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஓ-3)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு நிதி வழங்க அமைச்சு இணக்கம்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு இருபாலையில் நிரந்தர கட்டடம் அமைக்க நிதி உதவி வழங்க கல்வி அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் பலாலி வீதி, திருநெல்வேலிப் பகுதியில் தற்காலிக கொட்டில்களில் இயங்கிவரும் இந்நிறுவனத்தை நிரந்தர கட்டடம் ஒன்றில் இயங்கச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் நடத்த கல்வியமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இந்த நிறுவனத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைக்க நிதி உதவி வழங்குமாறு கோரினார்.

இதற்கான நிதியை வழங்க ஏற்பாடு செய்வதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு உறுதியளித்துள்ளார்.

பெரும்பாலும் எதிர்வரும் நவம்பர் மாதம் இதற்கான நிதி ஒதுக்கப்படும் என மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ஓ-3)

**நாளை**

புரட்டாதி 11
ஞாயிற்றுக்கிழமை
(28.09.2003)
திதி : திருதியை
வைகறை 3.21 வரை
நட்சத்திரம் : சித்திரை
முற்பகல் 9.48 வரை
சுபநேரம்: 9.02 - 10.32
ராகுகாலம்: 4.32 - 6.02
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

விரைவில் இறுக்கமாகும் நட்பு அதைவிட விரைவாகப் பிரிந்துவிடும்.

# மின் தடை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

மின்இணைப்புகளில் பராமரிப்பு வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதனால் இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் 5மணி வரை சில இடங்களில் மின்தடை ஏற்படும் என இலங்கை மின்சார சபையின் பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சியார்கோயிலடி, கோம்பையன் மணல், ஆனைக்கோட்டை மற்றும் நவாலி ஆகிய பகுதிகளிலேயே இன்று மின்தடை ஏற்படவுள்ளது.

குறித்த நேரத்துக்கு முன்னதாக வேலைகள் முடிவுற்றால் பிற்பகல் 5 மணிக்கு முன்னரே மின்சாரம் வழங்கப்படலாம் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# ஆசிரியர் தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அழைப்பு

## தொழிற்சங்க முன்னணி விடுத்தது!

கொக்குவில்,செப்.27

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கும் ஆசிரியர் தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்திருக்கின்றது கல்விசார் தொழிற்சங்க சம்மேளன முன்னணி.

இந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் பத்து கல்விசார் தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளன.

இதுதொடர்பாக மேற்படி முன்னணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உலக ஆசிரியர் தினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆசிரியர்களினதும், அதிபர்களினதும் தொழில் ரீதியான பல பிரச்சினைகள் காலம் காலமாக தீர்க்கப்படாது உள்ளன. இதுதொடர்பாக பலமுறை வேண்டுகோள்கள் விடுத்தும் அவற்றைத் தீர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால், ஏனைய அரச சேவையாளர்களைப்போல ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், வடக்கு - கிழக்கில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை அதிகம் உள்ளது. பல பாடசாலைகள் இயங்கவில்லை. பல பாடசாலைகளில் கட்டடங்கள் சேதமடைந்து உள்ளன. மாணவர்கள் தமது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பாடசாலைகளில் அமர்ந்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். எந்த நேரத்திலும் கட்டடம் இடிந்து விழும் என்ற பயத்தினால் அவர்கள் தமது புலனை கல்வியில் செலுத்தமுடியாதுள்ளது.

ஆகவே, எமது கோரிக்கைகளை வென்றெடுக்கவும் அதனூடாக எமது எதிர்காலச் சந்ததியின் சுபீட்சமான வாழ்க்கையை மேம்படுத்தவும் ஆசிரியர் தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவோம் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி ஆசிரியர் தினத்தன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நண்பகல் 12 மணிக்கு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தவும் கல்விசார் தொழிற்சங்க முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

யாழ். அஞ்சணந்தாழ்வு கொலைவிலக்கி ஆரோக்கிய அன்னை
ஆலயத் திருவிழா

## இறுதி வழிபாடுகள்

இன்று (27.09.2003) சனிக்கிழமை மாலை 5.30 மணி நற்கருணைப் பெருவிழா.
நாளை (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி திருநாள் திருப்பலி

அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்

தலைமையில் தொடர்ந்து அன்னையின் பவனி – அன்னையின் திருச்சொரூப ஆசீர் – என்பன நிகழும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(23020) (25-12-16) பங்குத்தந்தை - நாவாந்துறை.


## அம்பாறையில் தலையற்ற சடலம்!

அம்பாறை,செப்.26

அம்பாறை தம்புலுவில் பகுதியில் தலையற்ற நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தர்ராஜ் என்பவரது சடலமே அது எனப் பின்னர் அடையாளம் காணப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை தம்புலுவில் பொலீஸார் நடத்தி வருகின்றார்கள். (எ-12)

# இரண்டு வெதுப்பகங்கள் விஸ்வமடுவில் சீல் வைப்பு

கிளிநொச்சி, செப்.27

சுகாதார சீர்கேடான முறையில் பாண் தயாரிப்பதில் ஈடுபட்டதாகக் கூறி இரண்டு வெதுப்பகங்களை தமிழீழ சுகாதாரசேவையினர் சீல் வைத்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் விஸ்வமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இரண்டு வெதுப்பகங்களிலிருந்தும் பெறப்படும் பாண்கள் சுகாதார சீர்கேடு உடையனவை என பொதுமக்களும் விற்பனை நிலையங்களின் நிர்வாகிகளும் தமிழீழ சுகாதார சேவையினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர் என்றும்-

இதனையடுத்து நேற்றுமுன்தினம் அதிரடி நடவடிக்கையாக மேற்படி இரண்டு வெதுப்பகங்களையும் முற்றுகையிட்ட சுகாதார சேவைப்பிரிவினர் அங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர் என்றும் கூறப்பட்டது.

பரிசோதனையின்போது வெதுப்பகங்களில் பணியாற்றியவர்கள் உடற்சுத்தம் பேணாமலும், மாவை அரிக்காமல் பாண் உற்பத்திக்கு பயன்படுத்தியதும் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தகுந்த சுகாதாரம் பேணி பாண் உற்பத்தி செய்யக்கூடிய தகுதியைப் பெறும் வரை இந்தத் தடை உத்தரவு தொடரும் - எனவும் சுகாதார சேவையினர் தெரிவித்தனர். (எ-12)


# நடமாடும் இலவச கண்பரிசோதனை முகாம்

உங்கள் கண்களை நாங்கள் காப்போம்

* உங்கள் கண்களை இலவசமாக பரிசோதனை செய்வதற்கும்
* சகல வகையான மூக்குக்கண்ணாடிகளையும் விசேட கழிவு விலையில் பெற்றுக்கொள்வதற்கும்
* கண் பார்வை குறைந்த பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இடம்:* சாவகச்சேரி இந்துக்கல்லூரி
*காலம்:* நாளை (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை
*நேரம்:* காலை 9.30 மணி (புதிய நேரம்)



துஷா மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0212223461

(23018) (26-12-16)


# 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக வலி.தெற்கில் கையொப்பம் பெறும்பணி

வலி.தெற்கு,செப்.27

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்த 511 குடும்பங்களுக்கு ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் ரூபா கொடுபனவு வழங்குவதறகான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பிரதேச செயலகத்தினூடாக 511 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவை வழங்குவதற்காக இன்று சனிக்கிழமை பயனாளிகளின் கையொப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கென யாழ்ப்பாணச் செயலகத்தில் இருந்து வருகை தர உள்ள உரிய அதிகாரிகளுடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இப்பணியை மேற்கொள்வார்கள்.

பிரதேச செயலகம், ஏழாலை மேற்கு கிராமசேவையாளர் அலுவலகம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவையாளர் அலுவலகம் ஆகிய இடங்களில் வைத்து கையொப்பங்கள் பெறப்படவுள்ளன.

உடுவில், சங்குவேலி, இணுவில், தாவடி, சுன்னாகம், கந்தரோடை, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 511 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

- இன்று காலை 9மணி தொடக்கம் 12மணிவரை பிரதேச செயலகத்தில் வைத்து உடுவில், சங்குவேலி, இணுவில், தாவடி, சுன்னாகம், கந்தரோடை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களிடமிருந்து கையொப்பங்கள் பெறப்படும்.

பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மூன்று மணிவரை ஏழாலை மேற்கு கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்து ஏழாலைப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களிடம் இருந்தும் -

பிற்பகல் மூன்று மணியிலிருந்து நான்கு மணிவரை புன்னாலைக்கட்டுவன் தெற்கு கிராமசேவையாளர் அலுவலகத்தில் வைத்து புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களிடமிருந்தும் -கொடுப்பனவுக்கான கையொப்பங் கள் பெறப்படவுள்ளன. (ஓ-152)


# 'புதியதோர் உலகம் காண்போம்'

## புத்துலக பிரவேசம் - 2003

மாகாண மட்ட கைத்தொழில் கண்காட்சியும் போட்டியும்

இடம்: யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம்: 2003 செப்ரெம்பர் 27, 28, 29ஆம் திகதிகளில்
நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தொழிற்றுறைத் திணைக்களம், வ.கி.மா., திருகோணமலை.

(12-16) (சி-30323)



LG Abans



வடக்கு-கிழக்கு
மாகாண தொழிற்துறைத் திணைக்களம்
நடத்தும்

புத்துலகப் பிரவேசம்- 2003

மாகாண மட்ட

கைத்தொழில் கண்காட்சி யில்

உலகப் புகழ்பெற்ற LG, Haier தயாரிப்புக்களை Abans நிறுவன உத்தரவாதத்துடனும் விசேட விலைக்கழிவுடனும் இலவச விநியோக சேவையில் பெற்றுக்கொள்ளலாம்.

இடம் : யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம் : 27, 28, 29-09.2003
(சனி, ஞாயிறு, திங்கள்)

கண்டுகளியுங்கள்! கைமேற்பலன் உங்களுக்கு!!
கண்காட்சியைக் காணத் தவறாதீர்கள்!
அரியதொரு சந்தர்ப்பம்!!

LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

(C-30344)

# மரணத்தின் வாயிலிலிருந்து விவசாயியை மீட்ட கங்காரு

கங்காருவின் சமயோசித நடவடிக்கையால் சாவிலிருந்து மீண்டுள்ளார் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு விவசாயி.

இவர் வயலுக்குச் சென்றபோது அந்தப் பகுதியில் பலத்த புயல் வீசியது. அப்போது மரக்கிளை ஒன்று ஒடிந்து அவர் மீது விழுந்தது. இதில்காயம் அடைந்து அங்கேயே அவர் மயங்கி விழுந்துவிட்டார்.

அவருடன், அவரது குடும்பத்தின் செல்லப் பிராணியான ஒற்றைக் கண் உடைய கங்காருவும் சென்றிருந்தது. விவசாயி காயம் அடைந்ததையடுத்து பதைபதைத்த அந்தக் கங்காரு மார்வெல் பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்று கதவின் மீது முட்டி ஓசை எழுப்பி அவரது மனைவியை எழுப்பியது.

விவசாயி விழுந்து கிடந்த இடத்துக்கு விவசாயியின் மனைவியை அழைத்துச் சென்று அவர் அருகே அமர்ந்து கொண்டது கங்காரு.

அதனால்தான் அவரைக் கண்டு பிடித்து உயிரைக் காப்பாற்ற முடிந்தது. சிறிது நேரம் தாமதமாகச் சென்றிருந்தாலும் விவசாயி உயிர் பிழைத்திருக்க மாட்டார் என்று தெரிவித்தார் ஓர் அதிகாரி.



பிரபல ஆங்கிலப்பட இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் 'டேக்கன்' என்னும் தொலைக்காட்சித் தொடரில் நடித்ததற்காகச் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான 'பிரைம் டைம் எம்மி' விருதை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பெற்ற பூரிப்பில் டகோடா ஃபேனிங்.

# கொக்கோ கோலாவுக்கு எதிராக மற்றுமொரு குற்றச்சாட்டு

இந்தியாவின் கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம், பிளாச்சிமடம் என்ற இடத்தில் உள்ள 'கொக்கோ கோலா' தொழிற்சாலைக்கு பெருமட்டி கிராமப் பஞ்சாயத்து அழைப்பாணை அனுப்பியுள்ளது.

அந்தத் தொழிற்சாலையின் செயற்பாட்டினால் அப்பகுதியில் நிலத்தடி நீர் குறைந்துவிட்டதாகவும், அப்பகுதி மக்களின் உடல்நலத்துக்கு தீங்கு ஏற்படுவதாகவும் பஞ்சாயத்து தெரிவித்துள்ளது.

"உங்கள் ஆலையை ஏன் மூடக்கூடாது?" என்பதற்கு பதில் தெரிவியுங்கள் என்று கோரி ஹிந்துஸ்தான் "கொக்கோ கோலா" நிறுவனத்திடம் பஞ்சாயத்து கேள்வி எழுப்பியுள்ளது.

ஓர் ஆழ்துளைக் கிணறு தோண்ட மட்டுமே அந்த ஆலைக்கு அனுமதி தரப்பட்டிருந்தது. ஆனால், விதிகளை மீறி 6 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. மேலும் அந்த ஆலை வீசி எறியும் கழிவுப் பொருள்களால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்களின் உடல்நலத்துக்கு தீங்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆலைக்கான உரிமத்தை கடந்த ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி பெருமட்டி கிராமப் பஞ்சாயத்து ரத்துச் செய்தது. இதையடுத்து ஆலை நிர்வாகம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

ஆனால், உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுக்கு உயர்நீதிமன்றம் மே மாதம் உத்தரவிட்டது. இந்த உத்தரவைச் செயற்படுத்த மாநில அரசு தவறிவிட்டது. எனவே, மாநில அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரவும் பஞ்சாயத்து திட்டமிட்டுள்ளது.

# அக்கரைச் சீமையிலே...

தொகுப்பு: மதுமதி

## காலில் குழம்பை ஊற்றியதற்கு ஒரு ரூபா நஷ்டஈடு தர உத்தரவு

இந்தியாவின் புதுடில்லி நகரில் ஹோட்டல் ஒன்றில் 16 ஆண்டுகளுக்கு முன்பு சாப்பிடச் சென்ற சட்டத்தரணி ஜிதேந்தர் மோகனின் காலில் ஊழியர் ஒருவர் குழம்பைக் கொட்டிவிட்டார். இந்த சேவைக் குறைபாடு காரணமாக அந்த ஊழியரும் ஹோட்டல் நிர்வாகமும் சேர்ந்து சேத அடையாளமாக வழக்கறிஞருக்கு ஒரு ரூபாய் வழங்க வேண்டும் என்று டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டில்லியில் கன்னாட் சர்க்கஸில் நிருலாஸ் ஸ்நாக் பாருக்கு கடந்த 1987 ஜூன் 9ஆம் திகதி ஜிதேந்தர் மோகன் தனது குடும்பத்தாருடன் சென்றிருந்தார். அப்போது ஊழியர் ஒருவர் தனது காலில் குழம்பை கொட்டிவிட்டதாகவும் அதனால் காற்சட்டை வீணானதாக வும் காலில நமைச்சலும் ஏற்பட்டதாகவும் சட்டத்தரணி நீதிமன்றில் முறையிட்டார்.

ஹோட்டல் நிர்வாகம் தனது தரப்பை முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதிவுசெய்து கொள்ளவும் மறுத்து விட்டது என்றும் அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பான வழக்கு டில்லி நீதிபதி நரோத்தம் கௌசல் முன் விசாரணைக்கு வந்தது.

குழம்பை சட்டத்தரணி காலில் கொட்டியதாகக் கூறப்படும் ஊழியர், தான் நிருலாஸ் ஸ்நாத் பாரில் வேலை செய்ததை ஒப்புக்கொண்டார். ஆனால், மனுதாரர் கூறுவது போன்ற சம்பவம் நடைபெறவில்லை என்று அவர் தெரிவித்தார்.

சேவை குறைபாடு காரணமாக சம்பந்தப்பட்ட ஊழியரும் ஹோட்டல் நிர்வாகமும் சேர்ந்து மனுதாரருக்கு ஒரு ரூபாய் வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

"ஹோட்டல் நிர்வாகம் சட்டத்தரணிக்கு 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 29 இல் ஒரு கடிதம் அனுப்பியுள்ளது. அதில் இலவச மதிய உணவுடன் கூடிய சந்திப்புக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது அவருடன் சமரசம் செய்து கொள்ள ஹோட்டல் நிர்வாகம் முயன்றதையே காட்டுகிறது. ஆனால், அதைச் சட்டத்தரணி நிராகரித்துவிட்டார்" என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

****

## ரூ 8 கோடிக்கு விலை பேசப்படும் டயானாவின் காதல் கடிதங்கள்

மறைந்த பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் காதல் கடிதங்களுக்கு 8 கோடி ரூபா தர முன்வந்துள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த தொழிலதிபர் இயன் வில்ஸ் (வயது 41).

இது தொடர்பாக அவர் டயானாவின காதலர் ஜேம்ஸ் ஹெவிட் (வயது 45) உடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். டயானா எழுதிய காதல் கடிதங்களைத் தர ஜேம்ஸ் ஹெவிட மேலும் அதிக அளவில் பணம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

டயானாவின் காதல் கடிதங்கள் தொழிலதிபர் இயன் வில்ஸ்ஸால் விலை பேசப்படுவதை ஜேம்ஸ் ஹெவிட் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், இதில் இறுதி முடிவு எதுவும் இன்னும் எட்டப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

டயானாவின் காதல் கடிதங்களை ஆதாயம் பெறும் நோக்கத்தில் வாங்க விரும்பவில்லை. நல்ல நோக்கம் காரணமாகவே அதை வாங்க விரும்புகிறேன். கடிதங்கள் கிடைத்ததும் அவற்றை டயானாவின் மகன்களான இளவரசர்கள் வில்லியம், ஹரியிடம் அவற்றை ஒப்படைப்பேன் - என்கிறார் இயன் வில்ஸ்.






தமிழகத்தில் 'பொடா' சட்டத்தை கைத்துக் கொண்டு, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்ற பெயரில் தனது அரசியல் எதிரிகளை சிறையில் தள்ளுகிறார் முதல்வர் ஜெயலலிதா. இதனையொட்டி 'தினமலர்' நாளிதழில் வெளியான இரு கேலிச்சித்திரங்கள் இவை.



உலகிலேயே மிக நீளமான காதுகளைக் கொண்ட நாய் பிரிட்டனின் வெஸ்ட் சஸெக்ஸ் நகரத்தைச் சேர்ந்த ஜெ.ஃப்ரீஸ். அதன் காதின் நீளம் 29.2 செ.மீ. அடுத்த ஆண்டு வெளிவர இருக்கும் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இது இடம்பெற்றுள்ளது. காதைப் போலவே அதன் காதுகள் ரூ.46லட்சத்துக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளன. மதிப்பு மிக்க 'காதர்'.



பிரிட்டனின் கென்ட் நகரில் உள்ள 'ஹோப் ஃபார்ம் கண்ட்ரி பார்க்' நிறுவனத்தினர் தயாரித்துள்ள 'பான்கேக்' இது. இதன் உயரம் 15 செ.மீ., எடை 45.7 கிலோ, விட்டம் 1.35 மீற்றர் கொண்ட இதைத் தயாரிக்க ஒன்றரை மணி நேரம் செலவானது. உலகிலேயே மிகப் பெரியது என்ற பெருமையைத் தட்டிச் சென்றுள்ளது இந்த பான்கேக். இது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

# கருணைக் கொலைபுரிய அமெ. நீதிமன்றம் உத்தரவு

அமெரிக்காவில் மூளை பாதிக்கப்பட்டு கடந்த 13 ஆண்டுகளாக கோமா நிலையில் இருந்துவரும் டெரி ஷியோவோ (வயது 39) என்ற பெண்ணுக்கு உணவு செலுத்தப் பயன்பட்டுவரும் குழாயை அகற்றுமாறு மருத்துவர்களுக்கு புளோரிடா நீதிமன்றம் கடந்த 17 ஆம் திகதி உத்தரவிட்டது. இது கருணைக் கொலை எனக் கருதப்படுகிறது.

டெரி ஷியோவோவுக்கு கடந்த 1990 ஆம் ஆண்டு மாரடைப்பு ஏற்பட்டது. இதையடுத்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவரது மூளை பாதிக்கப்பட்டது. அவர் தொடர்ந்து கோமா நிலையில் இருந்து வருகிறார்.

உயிர்காக்கும் மருத்துவக் கருவிகள் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டு அதன் மூலம் உயிர் வாழ விரும்பவில்லை என்று மாரடைப்பு ஏற்படும் முன்பாகவே தன்னிடம் ஷியோவோ கூறியதாக அவரது கணவர் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான வழக்கை புளோரிடா நீதிபதி ஜோர்ஜ் கிரீர் விசாரித்தார். 13 ஆண்டுகளாக அசையாது கோமா நிலையில் இருந்து வரும்நோயாளிக்கு உணவு செலுத்தப் பயன்பட்டுவரும் குழாயை ஒக்ரோபர் 15 ஆம் திகதி அகற்ற வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார். நோயாளியின் பெற்றோர் தரப்பு வாதத்தை அவர் நிராகரித்துவிட்டார்.

பெற்றோரை அவர் அடையாளம் கண்டு கொள்கிறார். அவர்களிடம் பேசவும் முயற்சி செய்கிறார் என்று ஷியோவோ பெற்றோர் தரப்பு சட்டத்தரணி தெரிவித்தார். புளோரிடா நீதிபதியின் உத்தரவை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாகவும் அவர் சொன்னார்.

# ஆவி தந்த வாக்குமூலத்தால் கொலையாளிகள் கைது!

தமிழகத்தின் வாணியம்பாடி அருகே உள்ள மலைக் கிராமமான கிருஷ்ணாவரத்தைச் சேர்ந்தவர் சங்கர் (35). இவர் திம்மராயன் வலசைச் சேர்ந்த ரகுபதிக்கு ரூ.32 ஆயிரம் கடன் கொடுத்திருந்திருந்தார். இதற்கு ரகுபதி பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார். ரகுபதியிடம் சங்கர் பலமுறைகள் பணம் கேட்டும் கிடைக்காததால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது.

இந்நிலையில், பத்திரத்தோடு வந்தால் பணம் தருவதாகக் கூறி சங்கரை ரகுபதி அவரது வீட்டிற்கு வரவழைத்துள்ளார். 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பத்திரத்தை எடுத்துக்கொண்டு ரகுபதி வீட்டிற்குச் சென்ற சங்கர் பின் வீடு திரும்பவில்லை.

இது குறித்து காவலூர் பொலிஸில் சங்கரின் மனைவி புகார் செய்திருந்தார். ஆனால், பொலிஸார் புகாரை வாங்க மறுத்துவிட்டனர்.

இந்நிலையில், அடிக்கடி சாமி வந்து "பேயாட்டம்" போட்ட நாயக்கனூரைச் சேர்ந்த சிவசாமி என்பவரை செப். 10 ஆம் திகதி பேய்விரட்ட அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த ஜெயராமன் என்ற பூசாரியிடம் அழைத்துச் சென்றனர்.

பூசாரி முன் பேயாட்டம் போட்ட சிவசாமி, தன்னைப் பிடித்திருப்பது "சங்கர்" ஆவி என்று பீதி கிளப்பினார். தான் பணம் கேட்டு ரகுபதி வீட்டுக்குச் சென்றபோது ரகுபதி வீட்டினர் இளநீரில் மயக்க மருந்து கொடுத்தனர். ரகுபதி மற்றும் ராஜப்பா, வேலு ஆகியோர் தன்னை கை, கால்களை உடைத்து சாக்கில் கட்டி, ஒரு குட்டையில் மூடி பயிர் வைத்துவிட்டனர். என்ற திகில் தகவலை வெளியிட்டார்.

இவரது வாக்குமூலத்தை கிராம மக்கள் ஒலிநாடாவில் பதிவுசெய்து காவலூர் பொலிஸில் கொடுத்தனர்.

இதையடுத்து, சிவசாமி குறிப்பிட்ட குட்டையில் தோண்டிப் பார்த்தபோது எலும்புக்கூடு ஒன்றும், சங்கர் காணாமல் போன அன்று அணிந்திருந்த சட்டையும் கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவப் பரிசோதனைக்குப் பின் சங்கரின் எலும்புக் கூடுதான் என்பதும் உறுதிசெய்யப்பட்டது. பொலிஸார் நடத்திய தீவிர விசாரணையில், சங்கரைக் கொன்று புதைத்தது தாங்கள்தான் என்று வேலு ஒப்புக்கொண்டார். இதையடுத்து வேலு, சந்திரா ஆகியோரை பொலிஸார் கைதுசெய்தனர். ராஜப்பா, ரகுபதி ஆகியோர் தலைமறைவாகிவிட்டனர். இந்த ஆவி வாக்குமூலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# புலிகளின் புதிய முகாம் எதுவும் திருகோணமலையில் இல்லை

## அடித்துக் கூறுகிறார் அரச பேச்சாளர்

கொழும்பு,செப்.27

திருகோணமலையில் புலிகளின் புதிய முகாம்கள் எதுவும் இல்லை. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட புலிகளின் முகாம்களே அங்கு உள்ளன.

இப்படி மீண்டும் அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்.

பிரச்சினைக்குரிய குரங்குபாஞ்சான் முகாம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவினர் தொடர்ந்தும் பேசி வருகின்றனர் எனக் குறிப்பிட்ட அமைச்சா பீரிஸ், ஜனாதிபதியும் எதிர்க்கட்சிகளும் கூறுவது போன்று இதுவிடயத்தில் ஆபத்து எதுவும் இல்லை.

அரசும் புலிகளும் மீண்டும் ஒரு யுத்தத்தை விரும்பவில்லை. சமாதானத் தீர்வில் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கம் உண்மையை மூடி மறைக்கின்றது. அமைச்சர் பீரிஸ் புலிகளின் பேச்சாளராகச் செயற்படுகின்றார். திருகோணமலை எதிர்நோக்கும் விபரீதங்கள் தொடர்பாக இனியும் அரசுக்கு கூறுவதில் பலன் இல்லை என ஜனாதிபதி கருதுகிறார் என்று அவரின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இது பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று செய்தியாளர்கள் கேட்ட போதே அமைச்சர் பரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாம் பொறுப்பற்றமுறையில் எதையும் கூறிவிடமுடியாது. திருகோணமலைகது மட்டுமல்ல நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளோம். இவர்களைப்போல பாதுகாப்பு இரகசியங்களை அரசியல் ஆதாயத்திற்காக அம்பலப்படுத்த முடியாது எனவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடுமையாகக் கூறினார்.

# மலிந்திருக்கும் வன்முறைகளைக் குறைப்பதற்கு மரணதண்டனை முறை வேண்டுமா, இல்லையா?

## நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் விவாதம்

இனப்பிரச்சினை, பொருளாதாரம், அரசியல் ஆகிய காரணங்களுக்காகவே பெரும்பாலும் கொலைகள் இடம்பெறுகின்றன. ஆட்சியிலிருக்கும் அரசு இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும்.

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களது கருத்தை அறியும் வகையில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒத்திவைப்பு வேளைவிவாதம் நடைபெற்றது.

விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

மரண தண்டனையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற பிரேரணையை சுமார் எட்டு வருடங்களுக்கு முன்னர் அப்போதைய அரச எம்.பியான பாரத லஷ்மன் பிரேமச்சந்திர தனிநபர் பிரேரணையாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்




தார். அப்போது பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தனிநபர் பிரேரணைகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதும், அவை நடைமுறைப்படுத்தப்பட்டதாக சரித்திரம் இல்லை. ஆனால், மரணதண்டனை தொடர்பான இந்தப் பிரேரணையை அமுல்படுத்த அப்போதைய நீதி மற்றும் அரசியல் விவகார அமைச்சராகவிருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நடவடிக்கை மேற்கொண்டார். இருந்தும் பௌத்த அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புக்கள் ஆகியவை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இதன் காரணமாக இந்தப் பிரேரணையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் கைவிட்டது.

நாட்டில் தற்போது கொலைகள், கொள்ளைகள் அதிகரித்ததை அடுத்து மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக பல்வேறு மட்டங்களிலும் ஐ.தே.மு.அரசு ஆராய்ந்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களது கருத்தை அறியும் வகையில் நேற்றுமுன்தினம் விவாதம் நடத்தப்பட்டது. இதற்கு முன்னரும் இந்த விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் மனச்சாட்சிப்படி உரையாற்றலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆளும் தரப்பினருக்கு தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்தக்கூடாது என்றே நேற்றுமுன்தினம் பல உறுப்பினர் உரையாற்றினர்.

பிரதி அமைச்சரான ஹேமகுமார நாணயக்கார அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ், எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோர் மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்தவேண்டுமென பல்வேறு உதாரணங்களை எடுத்துக்காட்டிப் பேசினர். (ஐ)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடு ஜனாதிபதியின் அசமந்தத்தால் இழுபடுகிறது

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு,செப்.27

லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவை மீண்டும் இயங்கச் செய்வதை ஜனாதிபதியே தாமதப்படுத்துகின்றார். இதனால் பல ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருந்தொகையானோர் தொழில்களை இழந்தும் நிற்கின்றனர். இவர்களுக்கு நியாயம் வழங்கவேண்டியது அரசின் முக்கிய கடமை. ஆனால், ஜனாதிபதியே இதற்குத் தடைபோட்டுத் தாமதப்படுத்துகின்றார்.

- இவ்வாறு நீதி, சட்டமறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ கே.எம் லொக்கு பண்டார குற்றஞ்சாட்டுகிறார்.

அரசியல் விவகார அமைச்சர் பீரிஸ் இதுபற்றிக் கூறியதாவது:-

லஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான நெஸ்பிட் அபேவீர கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் காலமானார். இவருடைய இடம் இன்னமும் நிரப்பப்படவில்லை. தற்போதைய அமைப்பின்படி மூன்று ஆணையாளர்களுள் எவராவது ஒருவர் இல்லாமல் போனால் கூட ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைத் தொடரமுடியாது. முன்பு ஜனாதிபதியே ஆணைக்குழு உறுப்பினர்களை நியமனம் செய்தார். ஆனால், 17ஆவது அரசமைப்பின்படி அரசமைப்பு சபை சிபார்சு செய்யும் ஒருவரையே ஜனாதிபதி அங்கீகரிக்க வேண்டும்.

அரசமைப்பு சபையில் நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். எனவே, அதில் தனிப்பட்ட ஒரு கட்சியின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய எவரையும் நியமிக்க முடியாது.

இதற்கேற்ப ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை மூன்றில் இருந்து ஐந்து பேராக அதிகரிக்கவும் யாராவது ஓர் உறுப்பினர் காலமானால் அல்லது இராஜினாமா செய்தால் அவர் இன்றியே குழுவின் நடவடிக்கைகளைத் தொடரவும் ஏதுவான வகையில் திருத்தச் சட்டத்திற்கான சிபார்சு ஒன்று நிதி அமைச்சால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதி அதனை அங்கீகரிப்பதில் தாமதத்தை ஏற்படுத்துகிறார். இதனால் பொதுமக்களே பாதிக்கப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

## பயிற்சிநெறி ஆரம்ப வைபவம்

தென்மராட்சி,செப்.27

தென்மராட்சி கல்வி வலயத்தில் அரச கரும மொழித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள அடிப்படை சிங்களம், அடிப்படை ஆங்கிலம் ஆகிய பயிற்சி நெறிகளின் ஆரம்ப வைபவம் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப.2.45 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

## மக்கள் வங்கியில்

# 70 கோடி ரூபாவுக்கு மேல் கடன்பெற்ற 33 பேர் கடனை இன்னும் மீளளிக்கவில்லை

## பிரதி அமைச்சர்

மக்கள் வங்கியில் 33 பேர் 70 கோடி ரூபாவுக்கு மேல் கடன்பெற்று இன்னும் மீளச் செலுத்தவில்லை. இவர்கள் மீதான வழக்குகள் எதுவும் இன்னமும் வாபஸ் பெறப்படவில்லை.

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன நாடாளுமன்றத்தில் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும் போதும் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நாங்கள் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும் போது மக்கள் வங்கியில் 11ஆயிரத்து 700 ஊழியர்கள் கடமையாற்றினர். 2002ஆம் ஆண்டில் 10 ஆயிரத்து 600 பேர் மத்திரமே மக்கள் வங்கியில் கடமையாற்றினர். 2001ஆம் ஆண்டு மக்கள் வங்கி 308 லட்சம் ரூபாவை லாபமாகப் பெற்றது. 2002ஆம் ஆண்டு 1,010 லட்ச ரூபாவை மக்கள் வங்கி லாபமாகப் பெற்றது.

மக்கள் வங்கியை அரசாங்கம் தனியார் மயமாக்குவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கவில்லை. இது விடயம் தொடர்பாக திறைசேரி ஆளுநர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

20 வருடங்களுக்குப் பின்னர் ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வட்டி வீதமும் குறைந்து வருகின்றது. (ஐ)


## அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

அளவெட்டி

26ஸ்ரீ 7807 இலக்க இசுசு லொறி உடற்கோப்பு மறுசீரமைத்தல் கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தின் மேற்படி லொறிக்கான உடற்கோப்பு மறுசீரமைப்பு செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்வி கோர விரும்பியவர்கள் கேள்வி வேலை விவரப்பத்திரங்களை சங்கத்தின் கடமை நேரங்களில் பெற்று 06.10.2003ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- பொது முகாமையாளர்.

(C/30359) (26-12-16)


## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மகிழ்ந்திருக்க வந்தது 28 - 08 - 1972



நினைத்திருக்கச் சென்றது 27 - 09 - 1998

### கப்டன் நிருபா/வினி

(ஓயாத அலைகள் 02)

(மகாதேவன் தர்சினி)

(யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி, A/L 1991)

*வாழும் மண்ணையும் வாழ்ந்த உறவையும்*
*வாஞ்சையுடன் நெஞ்சில் நேசித்தவளே!*
*நாளும் பொழுதும் நாவினில் நின் நாமம்*
*நாங்கள் சொல்லி நாவினிக்கின்றோம்*
*காலம் வந்து கணக்கைக் காட்டவோ*
*காலன் வந்தான் களமதில் உன்னிடம்?*
*நீளும் உலகினில் வாழும் நம்மனம்*
*கூடிநின் றென்றும் நின்னை நினைக்குமே.*

*"லக்ஸ்மண வில்லா"*
*சந்தை வீதி,*
*ஆவரங்கால், புத்தூர்.* (22928) (25-12-16)

பப்பா, அம்மா,
தங்கை பிரசாந்தி,
உறவினர்கள்.


## விற்பனைக்கு

தச்சுவேலை செய்யும் சைனா மெசின்கள் 10",12",14",16" ஆகியனவும் மின்சார ரில்லர்கள், அலுமினிய கட்டிங்மெசின், டிசைன் சீவும் றவுட்டர்கள், ஜெனரேட்டர்கள், வெல்டிங் பிளான்ற் இவற்றுக்கான உதிரிப்பாகங்களும் வேறு வகையான மின்சார சாதனங்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
கி. சுதாகரன்
இல.20, இரண்டாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(21-15-16) (C-30297)



## 2003 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சையில் இருபாடங்களில் சித்தி

இந்தியாவில் பெங்களூர் சர்வகலாசாலையுடன் இணைந்த தேசிய முதற்தரக் கல்லூரி நாஷனல் பெஸ்ற் கிறேட் கொலிஜ்

B.Sc., B.B.M., B.C.A. பட்டப்படிப்பு

இந்த வருடத்திலேயே இணைந்து கொள்ளுங்கள்

ஒரு வருடத்தை மீதப்படுத்திக் கொள்ளுங்கள்

விண்ணப்ப முடிவு திகதி :30.09.2003
திரு.குணவர்த்தன: 01 2311524
திரு.குணசேகர : 03 82232657

கம்பனி செக்ரட்ரேரியல் சேர்விசெஸ் பிறைவேட் லிமிட்டெட்
285, C1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட.
01-2854438, 0777 387273

(சி-30352)(12-15-16)



## வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம் யாழ். மாவட்டக் கிளை

நிர்மாணிகளுக்கான விசேட கலந்துரையாடல்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம் : 29.09.2003 திங்கட்கிழமை
நேரம் : பிற்பகல் 3.00 மணி
விடயம் : நிர்மாண ஒப்பந்த வேலைகள்

தமிழீழ நிர்வாக சேவைப் பிரிவினருடனான கலந்துரையாடல் இடம்பெறும். அனைத்து நிர்மாண ஒப்பந்தகாரர்களும் தவறாது சமுகம் தரவும்.

(23010) (25-15-16) - தலைவர்.


## மரண அறிவித்தல்

### இராசரெத்தினம் சிவதாஸ்

(முன்னாள் உபதலைவர் - வல்வெட்டித்துறை நகரசபை)

தொண்டமனாற்றைச் சேர்ந்த இராசரெத்தினம் சிவதாஸ் 22.09.2003 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வசந்தாதேவியின் (மலர்) அன்புக் கணவரும் பிரபாகரன் (U.S.A.), உஷா (OMAN), அனுசியா (U.S.A.) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவீந்திரன் (OMAN), ராஜேந்திரா (U.S.A.), பாமா (U.S.A.) ஆகியோரின் அருமை மாமனாரும் தீபிகா, கீர்த்திகா, விகாஷ், அமோஷா, சேயோன், வைசிகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற தொண்டமனாறு பிரபல வர்த்தகர் வீரகத்திப்பிள்ளை இராசரெத்தினம் தம்பதியின் மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரைஐயர் மற்றும் திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி மற்றும் R.T. சம்பந்தர், சந்திரசேகரம், சிவகுமாரன், சண்முகலிங்கம், சிவசுப்பிரமணியம், பாலேந்திரா, சடாட்சரதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொள்ளுப்பிட்டி, காலி வீதி, 532/1/A, இலகக இல்லத்தில் இன்று (27.09.2003) சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் காலை 8.30மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கனத்தைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதாயினி சுந்தரமூர்த்தி
(பெறாமகள்)

*210, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (22976) (26-15-16)

# சட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படுமாயின் ஒழுக்கக்கோவை எதற்கு?

**தற்போதைய அரசியல்வாதிகள் சட்டத்திற்கு மதிப்பளிக்காது சட்டத்தைக் கையிலெடுத்து குற்றவாளிகள் போல் செயற்படுவதற்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் ஒரு காரணமாகும். அரசியல்வாதிகளின் ஒழுக்கக் கேடுகள் குறித்து இக்கட்டுரையில் ஆராய்கிறார் நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் சாம் விஜேசிங்க. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒழுக்கவிதிக்கோவையொன்று உருவாக்கப்படல் அவசியமென்ற கருத்து எமது சமூகத்தில் அண்மைக்காலமாக நிலவிவந்துள்ளது. அந்நடவடிக்கையை ஆரம்பிப்பது போன்று அண்மையில் தமது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென ஐ.தே. கட்சி ஒழுக்க விதிக்கோவையொன்றினைத் தயாரித்து வழங்கியுள்ளது. இவ்வாறான ஆவணம் ஒன்றினைத் தயாரித்து வழங்குவதால் ஏற்படக்கூடிய பலாபலன்கள் குறித்தும், இந்நடவடிக்கை காரணமாக எதிர்காலத்தில் இப்போதைய நிலையைவிட அரசியல்வாதிகள் ஒழுக்கசீலர்களாக நடந்துகொள்வார்களா என்பது குறித்தும் இவ்வேளையில் நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகிறது.

அறிவாற்றலுடன் அனுபவமும் நிறைந்த மனிதரொருவர் அரசியலில் ஈடுபட்டிருப்பினும் சரி அல்லது வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பினும் சரி, அவர் ஓர் ஒழுங்கமைந்த ஒழுக்கவிதிகளைப் பேணி நடப்பவராகவே இருப்பார் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். உலக அனுபவமற்ற மனிதரொருவர் எத்தகைய தொழில் முயற்சியில் ஈடுபட்டபோதிலும் அவரால் தனது தனித்துவத்தை வெளிப்படுத்த இயலாது. ஆதலால் சட்டத்தின் மூலமாகவோ அல்லது இவ்வகை ஒழுக்க விதிக்கோவையின் மூலமோ ஒரு மனிதரை ஒழுக்க விதிகளுக்கு மதிப்பளிக்கும் மனிதராக உருவாக்குவது சிரமமானதாகும்.

ஆனால், இன்று நம்நாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளோர் சிலரது நடவடிக்கைகள் உண்மையில் வெட்ககேடான விடயமாகும். பொலீஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளுவது, விளக்கமறியலில் தடுத்து வைக்கப்படும் சந்தேக நபர்களை பலாத்காரமாக விடுவிப்பது, பொலீஸ் அதிகாரிகளின காதில் அறைதல், ஊடகவியலாளர்களுக்கும் மற்றும் தமது நடவடிக்கைகள் குறித்து விமர்சனம் செய்வோருக்கும் தொல்லை கொடுப்பது போன்ற நடவடிக்கைகள் தற்போது சர்வசாதாரண சம்பவங்கள் ஆகிவிட்டன. இந்த ஒழுக்கவிதிக்கோவை மூலம் இவ்வாறான நிலையைக் கட்டுப்படுத்த இயலுமா என்பதே எம்முன் எழுந்துள்ள வினாவாகும். நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள தண்டனை வழங்கும் சட்டங்கள் மற்றும் ஏனைய சட்ட விதிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிரயோகித்து சாதாரண பொதுமக்கள் போன்றே அரசியல்வாதிகள் மீதும் பாரபட்சமற்ற வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் அவர்கள் தற்போதுள்ளதைவிடக் கூடிய அளவில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வழிவகுக்கும் என எதிர்பார்க்கிறேன். தற்போதைய நிலையில் எந்தவொரு அரசினதும் அமைச்சரொருவர் இழைக்கும் தவறுக்கான தண்டனை அவருக்கு வழங்கப்படுவதில்லை. அதேவேளை பொதுமகனொருவர் அமைச்சரொருவருக்கெதிராக செயற்பட முனைந்தால் கடைசியில் அப்பொதுமகனே சிரமத்துக்கு உள்ளாகவேண்டி ஏற்படுகிறது.

எதிரணியில் அங்கம் வகிக்கும் வேளையில் நியாயமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் இயல்புடன் செயற்படும் இந்த அரசியல்வாதிகள், அரசதரப்பில் இணையும் வேளையில தம் அகிம்சைத்தன்மை அத்தனையையும் கைவிட்டு விடுகின்றனர். அந்த வேளையிலேயே அவர்களது சுயரூபத்தை எம்மால் இனங்காண முடிகிறது. தாம் எதிரணியில் இயங்கிய வேளையில், தாம் விமர்சித்த, தாம் சுட்டிக்காட்டிய தவறுகள் யாவற்றையும் தாம் அரசில் அங்கம் வகிக்கும் வேளையில் நேர்சீர் செய்துகொள்வதற்கு அவர்கள் முன்வருவதில்லை. கடந்த 15-20 வருடகால இந்நாட்டு அரசியல் வரலாற்றில் இத்தகைய நிலைமை அடிக்கடி இடம்பெற்று வந்துள்ளது.

ஐ.தே.கட்சி தனது கட்சி உறுப்பினர்களுக்கு ஒழுக்க விதிக்கோவையொன்றை உருவாக்கியுள்ளமை குறித்து நான் குறை கண்டுபிடிக்கவில்லை. அந்த ஒழுக்க விதிக்கோவையை வெற்றிகரமாக கடைப்பிடிக்க இயலுமா என்பது குறித்தே நான் சந்தேகம் கொள்கிறேன். இதனை எவ்விதத்தில் நடைமுறைப்படுத்திய போதிலும், இந்த அரசின் சில அமைச்சர்களது தவறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தப் பிரதமரால் இயலுமா? உண்மையில் இவ்வித முயற்சி கடைசியில் கேலிக்குரியதொன்றாகிவிடும். ஒழுக்க விதிக்கோவையை அறிமுகப்படுத்தினால் மட்டும் போதாது. அதனை நடைமுறைப்படுத்தும் திறன் அவசியமாகும் அல்லது அவ்வித குற்றச்சாட்டொன்றின் மீதான சட்ட நடவடிக்கைகளில் தலையிடாது இருத்தல் அவசியமாகும். அதை விடுத்து, மற்றையோர் முயலு முன்னர் நாம் அவ்வித ஒழுக்கவிதிக கோவையை உருவாக்கிவிட்டோம் என ஒப்புக்காகக் கூறிக்கொள்வதால் பயனேதும் கிட்டப்போவதில்லை.

அரசு தனது உறுப்பினர்களிடையே ஒழுக்கம் பேணப்படவேண்டும் என எண்ணினால், தவறு இழைக்கும் அரசியல்வாதி ஒருவரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவேண்டும். அவ்விதம் அரசில் அங்கம் வகிக்கும் அங்கத்தவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதால் அரசுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி பலதடவை சிந்தித்துத் தயங்கித் தயங்கி எவ்வித நடவடிக்கையையும் நிறைவேற்றுவது இயலாத விடயமாகும். செலவீனத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அமைச்சர்களின் பாவனைக்கு இந்தியத் தயாரிப்பு வாகனங்களைக் கொள்வனவு செய்யுமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் ஒரு தடவை வேண்டுகோள் விடுத்தபோது, தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சரொருவர் அவ்வேண்டுகோளை பரிகசித்து, விமர்சனம் செய்ததாகத் தெரியவந்துள்ளது. இவ்விதம் ஓர் அரசின் தலைவரது கருத்தையே உதாசீனம் செய்வோர் சாதாரண பொதுமக்கள் விடயத்தில் எவ்விதம் நியாயமாக நடந்துகொள்வரென எதிர்பார்க்க முடியும்? பிரதமரும், அமைச்சரவையின் கணிசமானோரும் நாட்டின் தற்போதைய சிரமநிலையில பொறுப்புடன் நடக்க கடும் முயற்சியெடுப்பதை அவதானிக்க முடிகிறது. ஆனால், நாட்டில் ஒழுக்கம் பேணப்படாத நிலையில் எவ்வித பொருளாதார முன்னேற்றம் ஏற்படினும், அதனால் பயனேதும் கிட்டப்போவதில்லை. பொதுவாக நேர்மையும், ஒழுக்கமும் குன்றிய எவ்வித நடவடிக்கைகளாலும் நாட்டுக்கோ அல்லது சமூகத்துக்கோ எவ்வித பயனும்கிடையாது.

தற்போதுள்ள தேர்தல் நடைமுறையின்கீழ் நியாயமான வகையில் தேர்தலை நடத்தவோ, நேர்மையான அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுக்கவோ வாய்ப்பு கிட்டுவது சிரமமே. வேட்பாளா ஒருவர் முழு மாவட்டத்திலும் பரவலாயுள்ள வாக்குகளைப் பெறும் முயற்சி மேற்கொண்டாக வேண்டும். அதற்காக லட்சக்கணக்கிலோ கோடிக்கணக்கிலோ பணம் செலவிட்டாக வேண்டும். வேட்பாளர் ஒருவர் வர்த்தக சமூகத்தினரிடம் பணம்பெற்றே தேர்தல் செலவுகளைச் செய்தாகவேண்டும். கடைசியில் தேர்தல் வெற்றிபெற்றதும் அந்த அரசியல் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. தேர்தலில் ஏதாவதொரு அரசியல்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதன் மூலம் உறுதியான அரசொன்று உருவாகத் தொகுதிவாரித் தேர்தல் முறை வழிசெய்தது. 1977இல் அவ்விதமான தேர்தல் ஒன்றின் மூலமே ஜே.ஆர். ஜயவர்த்தனாவால் உறுதியான அரசொன்றினை ஸ்தாபிக்க முடிந்தது. பின்னர் கொண்டுவரப்பட்ட அரசமைப்புச் சட்டத்தின்கீழ் இடம்பெற்ற தேர்தல்களில அரசமைத்த கட்சிகள் ஒருசில பெரும்பான்மை ஆசனங்களுடனேயே அரசமைக்க முடிந்தது. கடந்த பொ.ஐ. முன்னணி அரசு ஒரேயொரு பெரும்பான்மை ஆசனத்துடனேயே அரசமைத்தது. தற்போதைய ஐ.தே.கட்சி அரசு கொண்டுள்ளதோ ஆக இரண்டே இரண்டு பெரும்பான்மை ஆசனங்களே யாகும். இந்நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் நாட்டின் சட்டதிட்டங்களைத் தம் கைகளில் எடுத்துக்கொண்டு பேயாட்டம் ஆடும் நிலையும், அரசின் தலைவர்களுக்கு மதிப்பளிக்காத வகையில் செயற்படும் நிலையும காணப்படுகிறது. இவ்விதம் செயற்படும் அமைச்சர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முயன்றால் தனது வாக்குப் பலத்தை அந்த அமைச்சர் அரசுக்கெதிராகப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாவதுடன், அரசு ஆட்டம் காணும் நிலையும் ஏற்படுகிறது. இது ஒருபுறமிருக்க, தற்போதைய அரசமைப்பின பிரகாரம் தவறி



சாம் விஜேசிங்க

ழைக்கும் அமைச்சர் ஒருவரை அப்பதவியினின்றும் அகற்றும் அதிகாரம் பிரதமருக்கல்லாது ஜனாதிபதிக்கே உரியதாகும். அவ்வித சந்தர்ப்பமொன்றில் குறிப்பிட்ட அமைச்சரை பதவியிலிருந்து அகற்றுமாறு ஜனாதிபதிக்குச் சிபார்சு செய்ய மட்டுமே பிரதமருக்கு உரிமையுண்டு. பிரதமரின் சிபார்சை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளாவிடில், பிரதமரின் நிலை என்னவாகும்? இவ்விரு தரப்பினரிடையேயும் பற்பல பேதங்கள் நிலவுவதால் இவர்கள் ஒன்றிணைந்து செயற்படுதல் சாத்தியமற்றதாகும்.

தமது அரசில் அங்கம் வகித்த ஒரு சில அமைச்சர்களின் ஒழுக்கம் திருப்தியாக இல்லாதிருந்த போதிலும அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள சந்திரிகாவால் இயலவில்லை. தற்போது அதே நிலை ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்விதம் அரசுத் தலைவர்கள் எவ்விதமாவது தமது பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் செயற்படுபவர்கள். நாட்டு மக்களால் தமக்கு வழங்கப்பட்ட அரச அதிகாரத்தை அடகுவைப்பது போன்று நடக்காது, அமைச்சர்கள் மேற்கொள்ளும் தவறுகளுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதால் தாம் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலும் பரவாயில்லை என்ற துணிவுடன் நேர்மையாக இயங்கும் அரசியல் தலைவர் எவரும் இன்று நம்நாட்டில் இல்லை. இதனால் நாளாந்தம் இந்நாட்டின் அரசியல் நாகரிகம் கீழ்நிலை அடைகிறது. எதிர்காலத்தில் நாட்டு மக்கள் இந்த அரசியல்வாதிகளைப் போன்றே, நாட்டின் அரசியல் நடைமுறைகளையும் ஏற்க மறுக்கும் நிலை உருவாகக்கூடும். இன்று அரசியல் அதிகாரத்தால் மமதை கொண்டுள்ள அரசியல் தலைவர்களில் சிலர் தமக்குத் துரோகமிழைத்தார்கள் எனத் தாம் கருதும் நபர்களுக்கு சட்டம், நீதி என்பவற்றுக்குப் புறம்பான விதத்தில் தாமே தண்டனை வழங்கும் பழக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

முக்கிய அரசியல் கட்சியொன்று, தனது கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் வேளையில் ஒழுக்கமும் திறமையும் கொண்டோரைத் தேர்ந்தெடுக்கத் தவறுவதேன் என்ற வினா தற்போது எம்முன் எழுகிறது. சமூகத்தில் நற்குணம், நல்லொழுக்கம் மற்றும் நேர்மை கொண்ட மனிதர்களில் பலிடம் இந்த அரசியல் தேன்கூட்டில் சிக்கிப் போராடக்கூடிய அளவுக்குப் பணபலம் கிடையாதென நான் எண்ணுகிறேன். கடந்த காலத்தில் அவ்வப்பிரதேசங்களைச் சேர்ந்த பணம் படைத்த, நாட்டு முன்னேற்றத்துக்கு உழைக்க விருப்புக்கொண்ட மனிதப்பண்புமிக்க சிலருக்காக வாக்குச்சேகரிப்புக்கு உதவுவதற்கு சண்டித்தனம்மிக்க ஆதரவாளர் பலர் இருந்தனர். பின்னர் காலப்போக்கில் இவ்வகை நல்ல மனிதர்கள் அரசியல் அரங்கைப் புறக்கணித்து ஒதுங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது. அந்த வெற்றிடத்தை ஈடுசெய்ய சமூகத்தில் அடிதடிச் சண்டைகளிலும், கொலைச்சம்பவங்களிலும் தொடர்பு கொண்டிருந்த சண்டியர்கள் அரசியலில் இடம்பிடித்துக்கொண்டனர். அவர்களில் சிலர் கடந்தகாலங்களில் உதவி அமைச்சர்களாகவும் நியமனம் பெற்றனர். ஆனால் இவ்வளவு தூரம் மதிப்புமிக்க பதவிகளை வகிக்க வாய்ப்புக்கிடைத்த வேளையிலும் அவர்களால் தமது பழைய போக்கைக் கைவிட முடியவில்லை. அவர்கள் தமது பதவிகளை உறுதிபடுத்திக் கொள்ளும் நோக்கிலும், மீண்டும் மீண்டும் அவ்வித அதிகாரமுள்ள பதவிகளை வகிக்கும் விருப்பிலும், கொலை, சண்டித்தனம் ஆகிய தம் பழையபாணி நடவடிக்கைகளையே கைக்கொண்டனர். இந்த வகையில் இக்கொலை, சண்டித்தனம் ஆகிய நடவடிக்கைகளே தமது பதவிகளை உறுதிசெய்ய ஒரேவழி என நம்பும் இந்த அரசியல்வாதிகளுக்கு அரசின் ஒழுக்கவிதிக்கோவைக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கு உருவாகுமா? அவர்களிடம் அது தொடர்பான முனைப்பேதும் உருவாகச் சாத்தியமுண்டா? என்பனவே எம்முன் தற்போது உருவாகியுள்ள கேள்விகளாகும்.

உலகின் பல நாடுகளில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் அத்தொழிலாள வர்க்கத்தினரை உள்ளடக்கிய விதத்தில் தொழிற்சங்கங்கள் உருவாக்கபட்டன. ஆனால், நமது நாட்டில் இவ்வகைத் தொழிற்சங்கங்கள் யாவும் அரசியல்வாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான தொழிற்சங்கங்களின் தலைவர்களாக அரசியல்வாதிகளே செயலாற்றுகின்றனர். இதன் காரணமாக நமது நாட்டில் அரசியல்வாதிகளுக்குப் புதுமையான அதிகாரங்கள் வாய்த்துள்ளன. அரசொன்றை உருவாக்கல் அல்லது வீழ்த்துதல் என்பன இத்தொழிற்சங்கப் பின்னணியிலேயே இடம்பெறும் நிகழ்ச்சிகளாயுள்ளன. இவ்வித புதுமையான அதிகாரம் சில அரசியல்வாதிகளுக்கு வாய்த்திருப்பதும் அவர்களின் தவறான செயற்பாடுகளுக்கு ஒரு காரணமாகிறது. தொழிற்சங்கங்களின் குறிக்கோள் தொழிலாள வர்க்கத்தினரின் நலன்களைப் பேணுவதாக அமைதல் வேண்டும். தொழிற்சங்கமொன்றின் அங்கத்தவர்கள் மத்தியில் வெவ்வேறு அரசியல் கருத்துக்கள் காணப்படலாம். ஆனால் நமது நாட்டில் தொழிற்சங்கங்களின் கட்டுபபாடு குறிப்பிட்டதொரு கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதியின் கைகளில் சென்றடைவதால் தொழிலாள வர்க்கத்தினரின் கருத்துச்சுதந்திரம் பாதிப்புற நேர்கிறது.

நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் இடம்பெற்ற அரசியல் போக்கால், அரசியல் ரீதியிலான செயற்பாடுகளில் அபிவிருத்தி குன்றிவிட்டன. இன்று அதனது உச்சக்கட்டம் உருவாகியுள்ளதாகத் தென்படுகிறது. பிரிட்டன் போன்ற பழம்பெரும் ஜனநாயக நாடுகளிலும்கூட இவ்வித தாழ்வு நிலை நிலவிய போதிலும், அவை நம்நாட்டு நிலைமை போன்று பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியதில்லை. பொதுஜன ஊடகங்கள் அரசியல்வாதிகளின் நடத்தைகள் குறித்து வெளிப்படையாக விமர்சித்து வரும் நிலையில் அவற்றைக் கணக்கில் எடுக்காது, வெட்கமோ, அன்றிப் பயமோ கொள்ளாது பதவிகளை இறுகப்பற்றிக்கொண்டு காலம் போக்கிய அரசியல்வாதிகளை மேற்கு ஐரோப்பியநாடுகளில் காணமுடியாது. அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த ரிச்சர்ட் நிக்சன் தனது பதவிக்காலத்தில் மேற்கொண்ட அரசியற் தவறினை செய்திஊடகங்கள் வெளியுலகுக்கு வெளிப்படுத்தியதையடுத்து தனது பதவியைத் துறந்து வெளியேறினார். கடந்த சில ஆண்டுகளின் முன்னர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் மீது மோனிக்கா லெவன்ஸ்கி என்ற பெண் மேற்கொண்ட குற்றச்சாட்டிலிருந்து கிளிடன் மயிரிழையில் தப்பித்துக்கொண்டார்.

நமது நாட்டில் டீ.எஸ்.சேனநாயக்க மற்றும் எஸ்டபிள்யூ.ஆர்.டீபண்டாரநாயக்க ஆகியோர் பிரதமர்களாகப் பதவி வகித்தகாலத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் லஞ்ச ஊழல் குற்றங்களை விசாரணை செய்யும் பொருட்டு விசாரணை ஆணைக்குழுக்களை உருவாக்கினர். அவ்விசாரணைகளின் முடிவில் தவறு இழைத்த உறுப்பினர்கள் தண்டனை பெற்றனர். அதுவுமின்றி, அவ்வித உறுப்பினர்களில் சிலர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க நேர்ந்தது. டீஎஸ்சேன நாயக்க பிரதமராய் இருந்தவேளை அவரால் நியமிக்கப்பட்ட எல்.எச்.டீ. டீ.த.சில்வா தலைமையிலான விசாரணை ஆணைக்குழுவினால் தவறிழைத்தோராகக் காணப்பட்ட பலாங்கொடைத்தொகுதி முன்னாள் உறுப்பினர் குணசேகர போன்ற சிலர் தமது பதவியைத் துறக்க நேர்ந்தது. அக்காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளா சார்பில் நாடாளுமன்ற அங்கத்துவம் பெற்றிருந்த வெள்ளைகார இனத்தவர்கள் தோட்டத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட சில உதவிகள் லஞ்சம் பெற்றுக்கொண்டதாகக் கருதப்பட்டு அதே சில்வா விசாரணை ஆணைக்குழுவினால் அவர்கள தவறிழைத்தவர்களாக முடிவுசெய்யப்பட்டமையால், அவர்கள பதவியைத்துறந்து வெளியேற வேண்டி ஏற்பட்டது என வரலாறு தெரிவித்துளளது.

எஸ்டபிள்யூ.ஆர்.டீபண்டாரநாயக்க லஞ்ச ஊழல் தொடர்பாக நியமித்த வோல்டர் தல்கொடபிடிய தலைமையிலான ஆணைக்குழுவின் விசாரணைகளில் தவறிழைத்தவர்களாக காணப்பட்ட டீ.பி.மொன்னகுலம, ஹென்றி அபேவிக்ரம மற்றும் ஏ.பி.த.சொய்ஸா ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியைத் துறக்கவேண்டி நேர்ந்தது. இவ்வகை விசாரணைகள் காரணமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்திற்கு அஞ்சிச் செயற்பட்டதாகத் தெரியவருகிறது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்திலும் தவறிழைத்தவர்களாகக் காணப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தின் பேரால் தண்டிக்கப்பட்டனர். ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உறுப்பினர்களின் ஒழுக்கத்தில் கண்டிப்புடன் செயற்பட்டமையால் அவர் பலரது கௌரவத்துக்குப் பாத்திரமானார். இந்த வகையில் டட்லி சேனநாயக்கவும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை குறித்து கடும் அக்கறை எடுத்துக்கொண்டார். இவ்வாறாக அரசின் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தவறுகள் குறித்து கடைப்பிடித்த அணுகுமுறைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதொரு வகையான அணுகுமுறையை ஜே.ஆர்.ஜயவர்த்தனா கைக்கொண்டார். தவறிழைத்த நாடாளுமன்ற உறுப்பினரை திருட்டு முயற்சியொன்றில் ஈடுபட்டுச் சிக்கிக்கொண்ட நபரொருவர்போன்று கருதாமல் அந்நாடாளுமன்ற உறுப்பினர் மீதான குற்றச்சாட்டு விவரங்கள் அடங்கிய கோவையொன்றினைத்

**வியெஸ்ரீ**

தயாரித்துப் பேணிவைக்கும் முறையே ஜே.ஆர்.கைக்கொண்டார். அதுமட்டுமன்றி சகல அமைச்சர்களிடமிருந்தும அவர்கள் கைபட எழுதிய திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களையும் பெற்று வைத்துக்கொள்ளும் உத்தியைக் கையாண்டார். அவர்களில் எவரையாவது பதவியைவிட்டு விலக்குவதென முடிவுசெய்யும் வேளையில் அந்த உறுப்பினர் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கோவையைப் பகிரங்கப்படுத்தி அவர்களது ராஜினாமாக் கடிதத்தை உபயோகித்து அவர்களைப் பதவியினின்றும் வெளியேற்றும் திறமை ஜே.ஆரிடம் காணப்பட்டது. அது அவரது தனித்துவமான அணுகுமுறையான போதிலும், அதிலுள்ள நியாயத்தன்மை எவ்வளவு தூரம் சரியானது என்பதைக் கூறமுடியாதுள்ளது.

மேற்சொன்னவற்றின் மூலம் பதவி வகித்த ஒவ்வொரு அரசுத் தலைவர்களும் தவறிழைத்த தமது கட்சி நாடாளுமன்ற அங்கத்தவர்களுக்கெதிராக பலதரப்பட்ட அணுகுமுறைகள் மூலம் நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

கடந்த காலங்களில் தற்போது பேசிக்கொள்ளப்படுவது போன்று நடத்தை, ஒழுங்குவிதிகள் குறித்து எவரும் பேசிக்கொண்டதாகத் தெரியவில்லை. சகல அரசியல்வாதிகளும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கௌரவமளித்து இயங்கினர். சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்க மறுத்தோர் சட்டத்தின்மூலம் தண்டனை பெற்றனர். ஆகவே, என்னதான் நடத்தை, ஒழுங்கு விதிகள் சிறப்பான வகையில் உருவாக்கப்பட்டபோதும் அவற்றை உரியமுறையில் செயற்படுத்த முடியாவிட்டால் அவற்றால் எதுவித பயனும் கிட்டப்போவதில்லை. அதேசமயம் அவ்விதம் உருவாக்கப்பட்ட நடத்தை, ஒழுங்கு விதிகளை நீதியான, நேர்மையான விதத்தில் செயற்படுத்தக்கூடிய அதிகாரமோ, திறமையோ தற்போதைய அரசு கொண்டிருக்கவில்லை என்பதே எனது அபிப்பிராயமாகும். ★

# செய்திக் கொத்து

## ஆஸ்பத்திரிக்கு மெத்தைகள்

யாழ்ப்பாணம்,செப்.27

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் ஒரு தொகுதி மெத்தைகள் வழங்கப்பட்டுள்ளன.

2000ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடம்பெயர்வுக்குப் பின்னர் கடந்த ஒரு வருடமாக மேற்படி வைத்திய சாலை 'வார்ட்டுக்கள்' இயங்கி வருகின்றபோதும், 25கட்டில்கள், மெத்தைகள் இன்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-10-117)

## விதை நெல் விநியோகம்

வரணி,செப்.27

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் வரணிப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு அண்மையில் விதை நெல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

கரம்பைக்குறிச்சி, மாசேரி, நாவற்காடு, குடமியன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கே இது விநியோகிக்கப்பட்டது.

கணவனை இழந்த சில பெண்களுக்குக் கோழிக்குஞ்சுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள் என்பவற்றை வழங்கவும் மேற்படி நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்பட்டது. (எ-10-170)

## கோழி வளர்ப்புக்கு இளவாலையில் உதவி

யாழ்ப்பாணம்,செப்.27

இளவாலை ஜே/155 கிராமஅலுவலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ள 51குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் கோழிகளும், கோழி வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வறுமை நிலையில் உள்ள பெண்களைக் குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன. (எ-10-135)

## கடற்றொழிலாளருக்கு மீன்பிடி உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,செப்.27

'கியூடெக்' நிறுவனத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக பெரியமாவடி, கெற்பலி, கச்சாய் ஆகிய தெரிவுசெய்யப்பட்ட மீனவர் சங்கங்களுக்கே இவை வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-10-ரி)

## யாழ்.வாசிக்கு மக்கள் வங்கியின் பணப் பரிசு

யாழ்ப்பாணம்,செப்.27

மக்கள் வங்கியின் ஜயூரி சேமிப்புத் திட்டத்தில் சேமிப்பை மேற்கொண்டவர்களுக்கான மாதாந்த சீட்டிழுப்பில் கடந்த மே மாதத்துக்கான முதல் பரிசான ஒரு லட்சம் ரூபா யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வாடிக்கையாளருக்குக் கிடைத்துள்ளது.

வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் வாடிக்கையாளரான கே.சிவஞானசுந்தரம் என்பவருக்கே இப்பணம் கிடைத்துள்ளது. (எ-10)

## மாணவர்களுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா நிதி உதவியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

இந்த வருடம்முதல் கடந்த ஒகஸ்ட் மாதம்வரை பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பத்து மாணவர்களுக்கு இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது. (எ-10-ரி)

## மிருசுவிலில் சமுர்த்தி வங்கி

தென்மராட்சி கிழக்கு வலய சமுர்த்தி வங்கி, மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள தனியார் வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போலினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-10-117)

## வீடுகள் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.27

கழிபுரம், நீத்துவன் பகுதியில் வாழும் வறிய குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்கள் வன்னிப் பிரதேசத்திலிருந்து வருகை தந்து தற்பொழுது அங்கு குடிசைகள் அமைதது வசித்து வருகின்றன. (எ-10-28)

## நஷ்டஈடு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.27

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்.கோவில் வீதியில் இளைஞர் குழுவொன்று மேற்கொண்ட அட்டாசத்தினால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களினால் சட்டத்தரணி ஊடாக நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. (எ-10-8)

## புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உதவிகள்

யாழ்ப்பாணம்,செப்.27

சுன்னாகம் ஸ்கந்தாக் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்படுகின்ற வறிய மாணவர்களுக்கு கல்லூரியின் நலன்புரிச்சங்க கொழும்புக் கிளையினால் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

பொறியியல், மருத்துவம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய துறைகளுக்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கவுள்ளன.

பல்கலைக்கழகத்தில் இவர்கள் கல்விபயிலும் காலத்தில் ஏற்படும் சகல செலவுகளையும் மேற்படி சங்கமே பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-10-152)

## இந்து கலாசார அமைச்சினால் வீடுகள் புனரமைப்பு

தென்மராட்சி,செப்.27

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பின்தங்கிய பகுதிகளில் இந்து சமய விவகார அமைச்சினால் 75 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

கொடிகாமம், மட்டுவில், கெற்பெலி ஆகிய பகுதிகளில் தலா ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சினால் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-10-117)

## வாய்க்கால் புனரமைப்பு

தென்மராட்சி,செப்.27

சாவகச்சேரி, விளைவேலி குளவாய்க்கால் இப்பகுதி விவசாயிகளால் துப்புரவு செய்யப்பட்டு ஆழமாக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் உலர் உணவுத் திட்டத்தின்கீழ் நீளமான இந்த வாய்க்கால்கள் இரு தினங்களில் துப்புரவு செய்து முடிக்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## யாழ்.ஆஸ்பத்திரிக்கு எட்டு டாக்டர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்போதனா வைத்தியசாலைக்கு மேலும் எட்டு டாக்டர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளகப் பயிற்சியை முடித்துக்கொண்டு புதிய நியமனம் பெற்றுள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த இந்த டாக்டர்களில் மூவர் பெண்களாவர்.

## சமுர்த்தி மகாசங்கம் அமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.27

சண்டிலிப்பாய், சங்கானை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கி சமுர்த்தி மகாசங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடைபெறும். (எ-10-175)

## பெற்றோரை இழந்த மாணவருக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்,செப்.27

குடாநாட்டின் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெற்றோரை இழந்த பாடசாலை மாணவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கல்விக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கென பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் பத்துக்கு உட்பட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு வருகின்றன. (எ-10-ரி)






அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய வீதியில் நேற்று நடைபெற்ற தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் அமைக்கப்பட்ட பந்தலின் முகப்புத் தோற்றத்தையும் அங்கு வைக்கப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப் படத்தையும் காணலாம். (படங்கள்: கரவெட்டி செய்தியாளர்)

## பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை,செப்.27

புன்னாலைக்கட்டுவன், ஈவினை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்சிகளும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் ச.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், பிரதம விருந்தினராக உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர்களான செ. செல்வரத்தினம், ந.ஜெயக்குமாரன் ஆகியோர் பங்குபற்றுவர். (எ-150)

# நெல் கொள்வனவு செய்வோர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

கிளிநொச்சி,செப்.27

நெல் கொள்வனவு செய்வோர் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை தமிழீழ நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

நெல் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தமிழீழ நிதித்துறையின் வருவாய்ப் பகுதி வழங்கும் தொழில்பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்றும் -

கொள்வனவு செய்யும் நெல்லுக்கான கொள்வனவுச் சிட்டையை கட்டாயமாக வழங்குதல் வேண்டும் என்றும் -

ஒரு கிலோ நெல்லை 11ரூபா 50 சதத்திற்குக் குறையாத விலையில் கொள்வனவு செய்யவேண்டும் என்றும் -

அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# மக்கள் முகம்



இருபாலை கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல் கடந்த முதலாம் திகதி யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இளைப்பாறிய பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தரான இவர், சமூக சேவை ஸ்தாபனங்களில் அங்கம்வகித்து வருகிறார். (எ-180)

★ ★ ★ ★



வடமராட்சி, கொற்றாவத்தையைச் சேர்ந்த பொ.கணேசலிங்கம், மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபனம், வை.எம்.சி.ஏ.ஆகியவற்றின் முன்னாள் முகாமையாளரும், ஓமான்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரியும் ஆவர். இவர் தற்போது பல்வேறு சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

★ ★ ★ ★



கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கந்தையா, நீதி நிர்வாக அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு அண்மையில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், நாவற்குழி, கைதடிப் பகுதி விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளரும், மறவன்புலோ, வள்ளக்குளம் வீரகத்திப் பிள்ளையார் கோவில் பரிபாலகரும் மறவன்புலோ சிங்கன கடனுதவு கூட்டுறவு சங்க உபதலைவரும், தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமாவர்.(எ)

★ ★ ★ ★



சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பு சிதம்பரப்பிள்ளை, நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். ஆரம்பத்தில் எழுதுவினைஞராகவும், பின் நீண்ட காலம் ஆசிரியராகவும் பணிபுரிந்து 1990களில் ஓய்வுபெற்ற இவர், தனது பதவிக் காலத்தில் மட்டுமன்றி ஓய்வுபெற்ற பின்னரும் கூட கிராமோதய சபை, சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கத்தானை சனசமூக நிலையம், கிராம்புவில் முருகன் ஆலய பரிபாலன சபை, மீசாலை மாவடிப்பிள்ளையார் ஆலய வழிபடுவோர் சபை மற்றும் சங்கத்தானை ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராகவும் இருந்து பணியாற்றியுள்ளார். இவர் தற்போதும் பல்வேறு சமய, சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார் (எ)

★ ★ ★ ★



மணியகாரன் ஒழுங்கை, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், மாசேரி, வரணியை வசிப்பிடமாவும் கொண்ட கந்தையா இராசேந்திரம், கடந்த 15ஆம் திகதி அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவனாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். நீண்டகாலம் நில அளவையாளராக பணிபுரிந்து 1990களில் ஓய்வுபெற்ற இவர், கொக்குவில் இந்துக்கல்லூரி மற்றும் யாழ்.மத்தியகல்லூரி ஆகியவற்றின பழைய மாணவரும் சமய, சமூக சேவையாளரும் ஆவார். (எ)

★ ★ ★ ★



தவசிக்குளம், மிருசுவிலைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை - அல்பிரட் அகில இலங்கை சமாதான நீதிவனாக நியமனம் பெற்று கடந்த 11 ஆம் திகதி மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை உபதலைவரும் - கொடிகாமம் கிராம அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினரும் ஆவார்.

தற்பொழுது இவர் சாவகச்சேரி நகரசபையில் உள்ளகக் கணக்காய்வாளராக கடமையாற்றிவருகிறார். (எ-31)

★ ★ ★ ★



வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சுந்தரம் செல்வரத்தினம் அண்மையில் மேலதிக மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கத்தின் உறுப்பினரும், கோப்பாய் தெற்கு அருள்மிகு ஞானவைரவர் ஆலய நிர்வாக ஆலோசகரும், சிறந்த சமூக சேவையாளருமாவார். (எ)

★ ★ ★ ★



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், கரணவாய் தெற்கு, வீரப்பதிராயனை வசிப்பிடமாகக் கொண்டவருமான சேதர் சிதம்பரப்பிள்ளை பாலசிங்கம், கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவனக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், முன்னாள் லேக்ஹவுஸ் (தினகரன்) யாழ். கிளையின் முகாமையாளரும், பூபாலசிங்கம் புத்தகசாலை (கொழும்பு) முகாமையாளரும் ஆவார். (எ-30)

★ ★ ★ ★



கனடாவில் வசித்துவரும் இலங்கையைச் சேர்ந்த பாஸ்கரன் நித்தலா தம்பதிகளின் புதல்வன் அஷ்வின்(வயது 9) கனடாவின் ரொறன்ரோ நகரில் இடம்பெற்ற ஆங்கில மொழிச் சொல் எழுத்துக்கூட்டல் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளார்.

இப்போட்டியை கனடாவின் எஸ்.பி.ஓ.சி. என்ற அமைப்பு அண்மையில் நடத்தியிருந்தது. இவர், பிறமொழி, பிற இனப் பிள்ளைகளுடன் பல தடவைகள் முயன்று போட்டியிட்டு இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

ஆங்கில மொழி ஆசிரியரான இவரது பாட்டியாரின் வழிகாட்டல், இவரது சாதனைக்கு உறுதுணையாக இருந்தது எனக் கூறப்படுகிறது. (எ)

# உடன்படிக்கையின் பயன் முழுமை பெற பாதுகாப்பு வலயங்கள் நீங்க வேண்டும்



ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூர்த்தியடைகின்றன. புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இருதரப்புகளுக்கும் இடையே நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

இக்காலப் பகுதியில் நடந்தவைகள் என்ன, அவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன பரிகாரத்தைத் தந்தன என்பன பற்றிய கருத்துக்களை தாங்கிவரும் செவ்விக்களம் இது.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் அளித்த செவ்வி இன்று வெளியாகின்றது. பலரது செவ்விகள் இந்தப் பகுதியில் தொடராக வெளிவரவிருக்கின்றன.

**செவ்வி கண்டவர் குகா**

*கேள்வி:* புரிந்துணர்வு உடன் படிக்கை நடைமுறைக்கு வந்து ஒன்றரை வருடங்களைக் கடந்துவிட் டது. அதனால் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன?

*பதில்:* புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டு கிட்டத்தட்ட 19 மாதங்கள் கடந்துவிட்டன. இக்கால கட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்க ளைப் பார்க்கும்போது, முதலாவது ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது. பல காலம் மூடப்பட்டிருந்த இந்தப் பாதை திறக்கப்பட்டதால், தென்பகுதி மக் கள் ஏராளமாக இங்கு வந்து, இங் குள்ள நிலைமைகளை அவதானித்து, இங்கு நடந்த போரின் கொடுமை களையும் அதனால் மக்களுக்கு ஏற் பட்ட அவலங்களையும் கண்ணால் கண்டு மனமாற்றத்தை அடையக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கடந்த காலப் போர் இந்த மக்களையும் இந்தப் பிர தேசத்தையும் எவ்வளவு இம்சைப் படுத்தியுள்ளது என்பதை தங்களால் உணரக்கூடியதாக இருப்பதாக அவர் கள் தெரிவித்தனர். இதனால் மனம் வருந்துவதாகவும் அவர்கள் கூறினர். அவர்கள் மத்தியில் மனமாற்றம் ஏற் படக் காரணமாக அமைந்தது. இந்தப் பாதை திறப்புத்தான்.

யாழ்ப்பாண மக்கள் இலகுவாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லவும் முடிகின்றது. இத்தகைய நிலை உருவாக புரிந்துணர்வு உடன் படிக்கை மேற்கொண்டமைக்காக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நன்றி சொல்லக் கட மைப்பட்டிருக்கிறோம். இந்தப் பாதை திறக்கப்பட்டதனால் வர்த்தகமும் வளர்ந்திருக்கின்றது. யாழ்ப்பாணக் கடைகளில் எல்லாப் பொருள்களை யும் வாங்கக்கூடிய நிலை உருவாகி யுள்ளது. மருந்துப் பொருள்கள், உண வுப்பொருள்கள், பால்மா வகைகள், கட்டடப் பொருள்கள் எல்லாம் வாங் கக் கூடியதாக உள்ளது. உள்நாட்டு உற்பத்திப் பொருள்களான வெங் காயம், கடல் வளங்கள் மீண்டும் தென்பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் எமது பொருளாதாரம் வளர வாய்ப்புக் கிட்டியுள்ளது.

புலம்பெயர்ந்துள்ள எமது மக்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இங்கு வந்து தமது உறவுகளுடன் தமது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. அத்துடன் தமது வீடு வாசல்களைப் புனரமைக்கக் கூடிய நிலையும் ஏற் பட்டுள்ளது.அத்துடன் தமது சொந்த பந்தங்களைப் புதுப்பிக்கிறார்கள்.

வெளிநாட்டு ராஜதந்திரிகளும் இங்கு வந்து மக்களின் உணர்வு களையும் யுத்தத்தால் அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையும் அறிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. மக்களின் தேவைகளை இனங்காண அவர்கள் தமது விஜயங்களைப் பாவிக்கிறார் கள். பாடசாலைகளும் அரச அலுவ லகங்களும் தற்சமயம் இயங்குகின் றன. மாணவர்கள் தமது கல்வி யைத் தொடர வாய்ப்புக் கிட்டியுள்ளது. மாணவர்கள் தமது கல்வி வளங் களைப் பெறக்கூடிய நிலையும் உரு வாகியுள்ளது.

இத்தகைய முன்னேற்றங்கள் இந்த உடன்படிக்கை வாயிலாக ஏற்பட்டுள் ளதை நாங்கள் மறுக்கமுடியாது.

அதேநேரம் சில குறைபாடுகளை யும் நாம் சொல்லத்தான் வேண்டும். மீளக்குடியமர வந்த மக்கள் தமது இல்லிடங்களுக்குப் போகமுடியாமல், கோயில்கள், அகதி முகாம்களில் தமது காலங்களைச் செலவழிப்பதை பார்க்கும்போது மனதுக்கு மிகவும் வேதனை தருகின்றது. அவர்கள் வாழ வேண்டிய இடங்கள் அதிபாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டு அந்த இடங்களுக்குப் போகமுடியாது இருப் பதால், இந்த மக்கள் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இது இப்போது பெரும் பிரச்சினையாக உள்ளது.

சுமுகநிலை ஒன்றை நாம் தோற்று விப்பதற்கு மீண்டும் குடிபெயர்ந்த மக் கள், இந்தநிலை மாறி தமது சொந்த இடங்களுக்குப் போய் தமது வீடு வாசல்களில் வசிப்பது அவசியமான காரியமாகும். அப்போதுதான் மக்கள் புரிந்துணர்வு உடன்பாட்டின் பயனை முழுமையாக அனுபவிக்கிறார்கள் என்று சொல்லமுடியும். ஆகையால் இந்த உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சி னையை சுமுகமாகத் தீர்ப்பது இன்று அவசியமான அம்சமாக இருக்கின்றது.

அதேபோன்று, இந்தக் காலகட் டத்தில் பல முன்னேற்றகரமான விட யங்களைச் செய்யவேண்டியுள்ளது. பல நாடுகள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. அதிகாரத்தைப் பரவ லாக்கி, இத்தகைய காரியங்களை முன்னெடுக்க கூடுதல் அதிகாரம் கொண்ட அமைப்புத் தேவையாக உள் ளது. ஆகவே, இடைக்கால நிர்வா கத்தை நல்ல வலுவுள்ள நிலையில அமைப்பது அவசியமாகவிருக்கின்றது. இதை அரசு கருத்தில் எடுத்து இந்த விடயத்தில் முன்னேற்றகரமான காரி யத்தைச் செய்யவிரும்பினால், அழிந்து கிடக்கின்ற யாழ்ப்பாணப் பிரதேசங் களை கட்டிஎழுப்ப விரும்பினால் அரசு இதைச் செய்யவேண்டும்.

இடைக்கால நிர்வாகத்தை உரு வாக்குவதற்கான தேவையை எல்லோ ரும உணர்கின்றார்கள். எனவே அரசு இதை முக்கியமாக கவனத்தில் எடுத் துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

நாம் நீதியான, நிரந்தரமான, சுமு கமான தீர்வை எடுக்க, அமைதியை நிலை நாட்ட உதவவேண்டும். இதற் காக அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களைத் தொடரவேண்டியது அவசியம். சில காலம் தேக்கம் அடைந்துள்ள பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்தும் சுமுக மாக நடக்கவேண்டும். எடுக்கப்படும் முடிவுகள் செயற்படுத்தப்படவேண் டும். இதுவே மக்கள் விருப்பமாகும்.

தற்சமயம் நிலவும் மந்தநிலை நீங்கி, சுமுகமாகவும் தீவிரமாகவும் நடக்கவேண்டும். ஏனெனில், எல்லா நாடுகளின் கவனமும் இலங்கை மீது திரும்பியுள்ளது. 20 வருடகால போர்க் கால நிலைமையை மாற்றி பேச்சு மூலம் அமைதியான சூழலை இந்த நாட்டில் கொண்டுவருவதற்கும், பொரு ளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கும், மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கும இந்த முயற்சி எவ்வளவுக்கு உதவப் போகின்றது என்று எல்லோரும் எம் மைப் பார்த்துக்கொண்டிருக்கிறார் கள். பலர் உதவ முன்வந்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை நாம் நழுவவிட்டால், மீண்டும் அவர்கள் பார்வை எம்மீது வரும் என்பது தெரி யாது. ஆகையால் தேக்க நிலை யைத் தொடரவிடாமல் விரைவில் பேச் சுக்களை ஆரம்பித்து, அரசுக்கு அழுத் தங்களை கொடுத்து, முந்திய ஒப் பந்தங்களை நடைமுறைப்படுத்தி, நீதியான, நிரந்தரமான தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசிய மானது.



அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடை யிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக் கங்கள் பலவாறாக இருக்கின்றன. அதன் முக்கிய நோக்கம் என்னவெனில் சமாதானத்தை நோக்கி நகர்வதுதான். அதற்கு இயல்பு வாழ்க்கை அவ சியமானது. இயல்பு வாழ்க்கையைக் கொண்டு வருவதற்குத்தான் மீளக்குடியமரவேண்டிய மக் களின் பிரச்சினை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதி பாதுகாப்பு வலய விவகாரத்துக்கு விரைவில் தீர்வு கண்டு, அந்த மக்கள் மீளக்குடியமரக் கூடிய சூழலை உருவாக்கும் போது இயல்பு வாழ்க்கை திரும்பிவிடும்.

*கேள்வி:* புரிந்துணர்வு உடன் படிக்கை ஓர் இலக்கை நோக்கி உரு வாக்கப்பட்டது. அந்த இலக்கு எட் டப்பட்டுள்ளதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்படிக் கையின் நோக்கங்கள் பலவாறாக இருக்கின்றன. அதன் முக்கிய நோக் கம் என்னவெனில், சமாதானத்தை நோக்கி நகர்வது. அதற்கு இயல்பு வாழ்க்கை அவசியமானது. இயல்பு வாழ்க்கையைக் கொண்டுவருவதற் குத்தான், மீளக்குடியமரவேண்டிய மக்களின் பிரச்சினை முன்நிலைப் படுத்தப்பட்டுள்ளது. விரைவில் இயல்பு வாழ்வு வரவேண்டும் என்பதே சக லரின் விருப்பம் ஆகும்.

*கேள்வி:* தெற்கில் நிலவும் அரசி யல் முரண்பாடுகள் சமாதான முயற் சிகளைப் பாதிக்குமா?

*பதில்:* தெற்கில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இடைவெளி உண்டு. இது யாவருக்கும் தெரிந்த விடயம். இவர்களின் சிந்தனைகள் வேறுபட்டவை. ஜனாதிபதியின் சிந் தனை நாளுக்கு நாள் மாறுபட்டவை யாக இருக்கின்றது. ஒரு ஸ்திரமில் லாத தன்மையைப் பார்க்கக் கூடிய தாக உள்ளது.

ஆகவே, தெற்கின அரசியல் நிலை ஸ்திரமடையவேண்டும். அதாவது, ஜனாதிபதியும் பிரதமரும் ஒத்த பார்வை யில் இந்தப் பிரச்சினையை அணுகி, அதை நாட்டின் பிரச்சினையாக எடுத்து நோக்குவதில் அவர்களின் முழுக் கவனமும் இருக்கவேண்டும் என்பது தான் எங்களது ஆதங்கமாகும்.

தெற்கில் இதற்கு எதிராகச் சில தீவிரவாதிகள் இருக்கத்தான் செய் வார்கள். சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்றவர்கள் கோஷம் இடுவார்கள். சமாதானத்தீர்வு தொடர்பாக எந்த வித கொள்கையும் அவர்களிடம் இல்லை. ஆனால், குழப்ப வேண்டும். என்பதுதான் அவர்களின் ஒரே நோக் கமாக இருக்கின்றது. ஆகவே, அவர் களைப் பெரிதாக எடுக்காமல், ஜனாதி பதியும் பிரதமரும் ஒன்று சேர்ந்து இந்த விவகாரத்தில் செயற்பட்டு தீர் வைக்காண வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்.

*கேள்வி:* பேச்சுக்கள் மீள ஆரம் பிக்கப்படும் என நம்புகின்றீர்களா?

*பதில்:* ஆம். இலங்கைப் பிரதம ரும், விடுதலைப் புலிகளின் தலை வரும் போரை நிறுத்தியுள்ளனர். பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றார்கள். எனவே, இருதரப்புகளுக்கும் இடை யில் நம்பிக்கையீனம் ஏற்படுவதைத் தவிர்த்து பேச்சைத் தொடர இரு வரும் முன்வரவேண்டும். கடந்த காலங்களில் நடந்த மூன்று பேச்சு களும் தோல்வியில் முடிந்தன. நான் காவது தடவை பேச்சுக்கள் நடக்கின் றன. முந்திய பேச்சுக்கள் தோல்வி யடைந்த நிலைக்கு இன்றைய பேச்சு செல்லக்கூடாது. இந்தப் பேச்சு நல்ல தீர்வை எட்டவேண்டும் என்பதே சக லரின் விருப்பமுமாகும். விடுதலைப் புலிகளின் தலைவரின் விருப்பமும் அபிலாஷையும் அதுதான். ஆகவே, பேச்சு மேசை ஊடாக தீர்வை எட்ட வேண்டும்.

*கேள்வி:* மீண்டும் யுத்தம் ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளதா?

பதில்: யுத்தம் வரக் கூடிய சாத் தியம் எப்போதும் இருக்கின்றது. ஆனால், யுத்தம் வராமல் தவிர்ப்பது எங்களிடம்தான் தங்கியுள்ளது. பொறுமையோடு, இதை அணுகி, புரிந்துணர்வோடு ஒவ்வொருவரின் சிந்தனைகளையும் கேட்டு விட்டுக் கொடுத்து, சமரசமாக தீர்வைக்காண முன்செல்லவேண்டும். ★

## மகளைக் கேலி செய்தோரை கண்டித்த தந்தைக்கு அடி உதை

தென்மராட்சி,செப்.27

யுவதி ஒருவரைக் கேலிசெய்த வர்கள் என்று கூறப்படும் இளை ஞர்களை அந்த யுவதியின் தந்தை கண்டித்தார். பின்னர் அவர் அடையா ளம் தெரியாத சிலரால் வழிமறித் துத் தாக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இத்தந்தை கொடிகாமம் பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டார்.

கொடிகாமம் எருவனைச் சேர்ந்த கந்தையா சிவராசா (வயது49) என்ப வரே கொட்டன்களால் தாக்கப்பட்டு காயமடைந்தவராவார். இவர் சாவகச் சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஓ-117)

## முன்பள்ளி மாணவருக்கு பளையில் சத்துணவு

பளைப் பிரதேசத்திலுள்ள 19 பாலர் பாடசாலைகளில் கல்வி பயி லும் சிறார்களுக்கு பளைப்பிரதேச சபையினர் சத்துணவுப் பைக்கற்றுக் களை வழங்கியுள்ளனர்.

மாணவர் தொகைக்கேற்ப சத்து ணவுப் பைக்கற்றுக்களை அந்தந்த பாலர் பாடசாலைகளின் ஆசிரியை களிடம் பிரதேச சபைச் செயலாளர் அண்மையில் வழங்கினார்.

சத்துணவுத் திட்டத்திற்கென பிர தேச சபையினால் 12ஆயிரம் ரூபா சபை நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## மோ.சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயம்

தென்மராட்சி,செப்.27

மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதி யில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டா சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கி ளோட்டி காயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒழுங்கையிலிருந்து வீதிக்கு திடீரென வந்த சைக்கிளுடன் மோதிய தில் விபத்து ஏற்பட்டதாகக் கூறப்பட் டது.

மீசாலை ஐயா கடையடியைச் சேர்ந்த விஜயரத்தினம் திலகரத்தினம் (வயது40) என்பவர் தலையில் காய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளார்.

(எ-117)

## யுத்தத்தால் சேதமடைந்த முற்றவெளி எரிபொருள் நிலையம் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்படும்

அரியாலை,செப்.27

முற்றவெளிப் பகுதியில் அமைந் திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தின் எரிபொருள் விற் பனை நிலையத்தை விரைவில் புனர மைப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகச் சங்கத் தின் தலைவர் சூ.சிறில் தெரிவித் தார்.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் இந்த எரிபொருள் விற்பனை நிலை யம் நவீன வசதிகளைக் கொண்ட தாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களினால் மேற் படி எரிபொருள் விற்பனை நிலை யத்தின் கட்டடம் தரைமட்டமாகியது. தற்போது தற்காலிக கொட்டகை ஒன்றிலேயே இந்த நிலையம் இயங்கி வருகிறது. (ஐ-17)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வரணி,செப்.27

வரணி, மாசேரிப் பகுதியில் கட் டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக மேய்ச்சலுக்குச் செல்கின்ற ஆடுகள், நாய்களின் கடிக்கு இலக்காகின்றன என்றும் - அண்மையில் இரண்டு ஆடுகள் இத னால் இறந்துள்ளதாகவும் - தெரி விக்கப்பட்டது. (எ-10-170)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு: இ.சேகர், 162, அரசடி வீதி (டயனா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P. 3146, 0712 347473. (22844)

இல.65, கச்சேரி நல்லூர் வீதியில கிணற்றுடன் கூடிய 1½பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.இராஜசிங்கம், 65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (23026)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கலைவாணி வீதியில், நல்ல சூழலில் வீடு கட்டக்கூடிய எட்டுப்பரப்புக்(8)காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பரதாரர், C/o DSI, நெட்டிலிப்பாய், கோண்டாவில். (22866)

## வீடு விற்பனைக்கு

75, கச்சேரி நல்லூர் றோட்டில் ஒரு பரப்புக்காணியில் அமைந்துள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.பரமேஸ்வரி, 395/4, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P. 222 6853. (23021)

## தவறிவிட்டது

சரவணலிங்கம் சிவரூபன் என்பவரது தேசிய அ.அ.(இல.823141017V) சிறுப்பிட்டிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் 25.09.2003 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வேபாரா என், இராஜ வீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (23029)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல் பிறந்த, மூலநட்சத்திரம், 7இல் செவ்வாயுள்ள, கனடாவில் பிரஜாவுரிமை பெற்றவருக்கு அழகிய, சிவந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக்குறிப்பு, குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல: 2054, மே/பா உதயன். (22988)

## சோதிடம்

கல்வி, தொழில், விவாகம், நோய் ஆகியவை பற்றி அறிய விரும்புகிறீர்களா? நேரில் வாருங்கள். ஜாதகம், கைரேகை, எண்விஞ்ஞானம் மூலமாக உங்கள் பலன்களைக் கேட்டுப் பாருங்கள். விவரங்களுக்கு: த.சிவானந்தன் (பிரபல சோதிடர்), 264, பலாலி வீதி, கந்தர்மடம் (பேபி போட்டோ முன்பாக). (23023)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள Tetrai SL பேடு, சேவல் குஞ்சுகள் 29.09.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறை கிளையிலும் பதிவு செய்யலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22778)

## கணனி விற்பனைக்கு

DELL PIII 6.5 GB HDD, 128MB RAM, 17' MONITOR சகிதம் விலை ரூபா 42,000/= TOWER CASING. தொடர்பு: 66/3, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். தினமும் மாலை 5.00 மணிமுதல் பார்வையிடலாம். (22925)

## இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 1kg 140/=. சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. (T.P: 021 222 3529) (23027)

## டீசல் என்ஜின் விற்பனைக்கு

மிக நல்ல நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் மாருதி டீசல் எஞ்சின் 10 கோஸ்பவர் சைனா 5KV டைனமோவுடன் உடன் விற்பனைக்குண்டு.

**ஆனந்தா அச்சகம்,**
**220, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(c/30356) T.P. 222 2820. (25-15-16-27)

# ஆசிரியர் தினத்தை அனுஷ்டிக்க வலிகாமத்தில் விசேட ஏற்பாடு

உலக ஆசிரியர் தினத்தை அடுத்த மாதம் 6ஆம் திகதி திங்கட்கிழமை வலிகாமம் வலய பாடசாலைகளில் காலையிலும், பிற்பகல் இரண்டு மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்திலும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தன்னலமற்ற கல்வி சேவையாற்றும் ஆசிரியர்களை மாணவர்களும், பெற்றோர்களும் இத்தினத்தில் சிறப்பாக கௌரவித்து சிறப்பிக்கவேண்டும் என வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் அறிவித்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்கள், உறுப்பினர்கள், அதிபர்கள் ஆசிரியரை சந்தித்து கலந்துரையாடுவதற்கும் அவர் ஒழுங்குகள் செய்துள்ளார்.

சங்கானை - சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்தவர்களை நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் - உடுவில், தெல்லிப்பழை கல்விக்கோட்டங்களைச் சேர்ந்தவர்களை 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கும் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (எ-152)

## கேதாரகௌரி விரத பூஜை

சாவகச்சேரி வாரிவனநாத சிவன் ஆலயத்தில் கேதாரகௌரி விரத பூஜை இவ்வருடம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி பூஜைகள் நடைபெறும்.

யுத்த அனர்த்தங்களால் இந்த ஆலயம் சேமடைந்தது. கடந்த மூன்று வருடங்களாக பூஜை வழிபாடு இன்றிக் காணப்பட்டது. (ஐ-117)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

தரமான இறைச்சிக் கோழிகளை மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம்.

தொடர்பு:-

**நொதேன் பாம் பிறைவேட் லிமிட்டெட்,**
விநாயகர் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

## இதயத்தில் பதிந்த சோக சுவடுகளில் உதிர்ந்த 13 ஆண்டுகள்

மலர்வு 23 07 1972 — உதிர்வு 20 09 1990



செல்வி
## யோகதர்ஷினி சிவசுப்பிரமணியம்

**திதி: பூர்வபக்க துதியை 27.09.2003**

வற்றிய சுனையாய் நின்ற
என் வாழ்வது சிறக்க வென்றே
கற்றவார் சடை எம் அண்ணல்
கனிந்தொரு பாவை தந்தான்
பொற்றிறம் பூத்த எந்தன்
பூமகள் தோற்றம் கண்டேன்
நற்றவப் பயனே இந்த
நாமகள் வரவே என்று
சொற்றிறம் பயின்ற செந்தேன்
மழலையில் மகிழ்வு கண்டு
அற்றது துன்பம் என்று
அகமகிழ்ந்திருந்த வேளை

செந்தமிழ் தேன் பிலிற்றும்
செய்யவாய் அமுதம் சிந்த
அந்தமில் அழகோடுந்தன்
அருகினில் இருந்த நாள்கள்
என் மனக் காட்சியாக
எனை நிதம் வாட்டும் போது
உன் பாசத் துணைக்காய் ஏங்கி
என் வாழ்வது கழிந்தே செல்லும்.

இன்று என் நிலைமை கண்டால்
உன் இதயம் தாங்கா தென்று
நீ முன்னமே உணர்ந்த தாலோ
நின் அத்தனை நீ பிரிந்தாய்
நின் உயிர் தங்கையோடு
நின் நிழல் அன்னை தன்னை
நீங்கிடா உள்ளத் தோடு
நித்தியமானாய் நீயே.

கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

நின் நினைவில்
கண் பனிக்கும்
அன்பின் அப்பா, அம்மா,
தங்கை.

(C/30372) UTHAYAN

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

Happy Birthday



செல்வன்
## இராசநாயகம் வினோஜன்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த
**திரு.திருமதி இராசநாயகம்-நந்தகுமாரி**
**தம்பதிகளின் தவப்புதல்வன் வினோஜன்**

27.09.2003

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.09.2003) சனிக்கிழமை அவரது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். வினோத்குட்டியை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டி, பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், மாமாமார்கள், மாமிமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், அண்ணாமார்கள், அக்காமார்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ முத்துமாரியின் அருள்பெற்று சகல கலைகளும் கற்று சிறப்புற நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
## தம்பிஐயா செல்லம்மா

பிறப்பு: 10.06.1923

இறப்பு: 28.08.2003


அன்புடனும் பாசத்துடனும் எம்மை
அமுதூட்டி சீராட்டி வளர்த்த தெய்வமே!
இன்பம் எல்லாம் நிறைவாக
இணைந்து நின்ற பாசநிலவே!
உம் நினைவால் நாம் கண்ணீரில் நனைகின்றோம்!
உம் நினைவால் உருகுகின்றோம்!

எங்கள் குடும்ப விளக்காய்த் திகழ்ந்து (28.08.2003) சிவபதம் அடைந்த அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை தெரிவித்து எமது துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (27.09.2003) சனிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"லக்ஷ்சுமி வாசம்"
இணுவில் மேற்கு,
இணுவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெறும் ஐ.நா. சபையின் 58 ஆவது கூட்டத்தில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றிய போது எடுக்கப்பட்டபடம்.

# 'நக்கீரன்' கோபாலின் பிணை உயர் நீதிமன்றத்தால் ரத்து



நக்கீரன் இதழின் ஆசிரியர் ஆர்.ஆர். கோபாலுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய பிணை அனுமதியை நேற்று இந்திய உயர் நீதிமன்றம் ரத்துச் செய்தது.

பொடா வழக்கில் கைதுசெய்யப்பட்டுள்ள கோபாலுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பிணை அனுமதி வழங்கியது. ஆனால், இதற்கு தமிழக அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. மேலும், இவ்வழக்கில் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீடு செய்தது.

நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வழக்கில் அரசின் வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்றது. அதனால் கோபாலை பிணையில் விடுதலை செய்யும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை ரத்துச் செய்து தீர்ப்பளித்துள்ளது உயர்நீதிமன்றம்.

## நைஜீரிய முஸ்லிம் நீதிமன்றால்

# விதவைக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை ரத்து!



தனது குழந்தையுடன் அமீனா லவால்

தகாத உறவு மூலம் குழந்தை பெற்ற நைஜீரியப் பெண்ணுக்கு வழங்கப்பட்ட கலலால் எறிந்துகொல்லும் தீர்ப்பை அந்நாட்டு மேல் நீதிமன்றம் ரத்துச்செய்துள்ளமைக்கு ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகள் வரவேற்புத் தெரிவித்து பாராட்டியுள்ளன.

அமனா லவால என்ற இந்த விதவைப் பெண்ணை கல்லால் எறிந்து கொல்லும்படி அங்குள்ள இஸ்லாமிய நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தர்ப்பை வாபஸ் பெறும்படி நைஜீரிய ஜனாதிபதிக்கு பெருமளவான வேண்டு கோள்கள் விடுக்கப்பட்டன.

அமீனாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பையடுத்து அந்த நாட்டில் நடக்கவிருந்த உலக அழகிப்போட்டியை மேற்கத்திய நாடுகள் புறக்கணித்தன. இறுதியில் கலவரம் ஏற்பட்டதைத தொடர்ந்து அழகிப் போட்டி லண்டனுக்கு மாற்றப்பட்டது.

அமீனாவை கல்லால் எறிந்து கொன்றால், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள நேரிடும் என்பதால் நைஜீரிய அரசு இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்தது. அதேபோல், அமீனாவும் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த மேல்நீதிமன்ற நீதிபதி, இஸ்லாமிய நீதிமன்றம் விதித்த தீர்ப்பை ரத்துச் செய்தார்.

அத்துடன், இந்த வழக்கில் அமீனா குற்றமற்றவர் என்று இணங்கானப்பட்டுள்ளார் எனக் கூறி வழக்கிலிருந்து அவரை விடுவித்து தீர்ப்புக் கூறினார்.

# அமெரிக்கப் பொலீஸார் மீது ஜனாதிபதி முஷாரப் பாய்ச்சல்

58ஆவது ஐ.நா.பொதுக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் அமெரிக்கப் பொலீஸார் மீது சீறிப் பாய்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் அங்கு வந்திருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினை சந்திக்க ஏற்பாடு செய்திருந்தார்.

ஆனால், போக்குவரத்து நெரிசல காரணமாக உரிய நேரத்தில் செல்ல முடியாததால் ஜனாதிபதி புடினை அவரால் சந்திக்க முடியவில்லை. பொலீஸார் தனது காருக்கு வழி ஏற்படுத்திததராததால்தான் ஜனாதிபதி புடினைச் சந்திக்கமுடியாமல் போனது என்று அவர் சீறிப் பாய்ந்துள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி ஈரானுக்கு எச்சரிக்கை

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளன என்றுகூறிவந்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் தற்போது தனது பார்வையை ஈரான் பக்கம் திருப்பியுள்ளார்.

ஈரானில் அணு ஆயுதங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அணு ஆயுதங்களை ஈரான அழித்துவிடவேண்டும். இல்லையேல் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை அலட்சியம் செய்து கருத்துத் தெரிவித்துள்ள ஈரானிய வெளியுறவு அமைச்சர், தம்மிடம் அணு ஆயுதங்கள் இல்லை என்று கூறியுள்ளார்.

## தொடர் தாக்குதல்களின் எதிரொலி:

# ஈராக்கிலுள்ள ஐ.நா. பணியாளர்களை திரும்பி வருமாறு தலைமை பணிப்பு!

நியூயோர்க்,செப்.27

ஈராக்கில் பணிபுரியும் தனது பணியாளர்களை அங்கிருந்து திரும்பிவருமாறு ஐ.நா.தலைமையகம் பணித்துள்ளது.

ஐ.நா தூதரகத்தையும், அதன் பணியாளர்களையும் குறிவைத்து ஈராக்கில் தாக்குதல்கள் நடந்து வருவதையடுத்தே இந்தப் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஐ.நா.தூதரகத்தை குண்டுவைத்துத் தகர்த்த பின்னரும் அங்கு பணியாளர்கள் தங்கியிருந்து சேவை புரிந்து வந்தனர்.

ஆனால், கடந்தவாரம் மீண்டும் ஐ.நா. தூதரக வளாகத்தில் குண்டு வெடித்ததினால் அங்குள்ள பணியாளர்களை மீள அழைப்பதென்று ஐ.நா. தலைமை முடிவெடுத்துள்ளது என்று அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஈராக்கில் இருந்து எவ்வளவு விரைவில் வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் வெளியேறுமாறு அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா. தூதரகத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும் அங்கு பாதுகாப்புக் கடமையில் இருக்கும் அமெரிக்கக் கூட்டுப் படையினரால் பாதுகாப்பு வழங்க முடியாது எனவும் ஐ.நா. தலைமை கூறியுள்ளது.

ஐ.நா. பணியாளர்கள் ஈராக்கில் இருந்து கூண்டோடு வெளியேறும் நிலை ஏற்பட்டுவருவதனால் அங்கு புனரமைப்புப் பணிகள் மந்தமாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஏவுகணைத் தாக்குதலில் எட்டுப்பேர் உயிரிழப்பு!

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு அண்மையில் உள்ள பகுவா நகரில் உள்ள சந்தைக்குள் வந்து வீழ்ந்து வெடித்த ஏவுகணையால் எட்டுப்பேர் உயிரிழந்துள்ளனர்; பதினெட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த ஏவுகணையைத் தாங்கள் ஏவவில்லை என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்தபோதும் அமெரிக்கப் படையினரே இதனை ஏவினார்கள் என்று ஈராக்கியர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தைக் கட்டடத்தினுள் வீழ்ந்த ஏவுகணையால் அப்பகுதி பரபரப்பானது. அங்கு நின்றவர்கள் அலறியடித்தபடி ஓட்டமெடுத்தனர்.

ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் பக்தாத் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சந்தைக் கட்டடத் தொகுதியில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் அமெரிக்கப் படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அவர்கள் ஏவிய ஏவுகணையே சந்தைக் கட்டடத்தினுள் வீழ்ந்து வெடித்தது என்றும் கூறப்படுகிறது.

ஆனால், பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினரைக் குறிவைதது சதாமின் ஆதரவாளர்கள் ஏவிய ஏவுகணையே குறிதவறி வெடித்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை,

சதாமின் சொந்த ஊரான திக்ரித்தில் அமெரிக்க படையினர் கடந்த வாரம் முதல் தொடர் தேடுதல்களை நடத்தி வருகின்றனர்.

முக்கியமாக செல்வந்தர்கள் என்று நம்பப்படுபவர்களின் வீடுகளையே படையினர் சல்லடை போட்டுத் தேடுகின்றனர்.

சதாமுக்கு இவர்கள் மூலமாகத்தான் நிதியுதவி கிடைக்கிறது என்று கூறும் படையினர் நேற்று அங்கு நால்வரைக் கைதுசெய்துள்ளனர்.

# ஜப்பானில் நேற்று பயங்கரப் பூகம்பம்!

ஜப்பானை நேற்று அதிகாலை பயங்கரப் பூகம்பம் தாக்கியது. இதில முந்நூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழப்பு குறித்து சரியான தகவல்கள் உடனடியாகத் தெரியவில்லை. எனினும், சுயாதீனத் தகவலின்படி பத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

நேற்று அதிகாலை 4.50 மணியளவில் ஏற்பட்ட இந்தப் பூகம்பம் 8 ரிச்டர் அளவாகப் பதிவாகியிருந்தது.

## உலக அரங்கில்

வடபகுதி நகரான ஹொக்காய்டோ தீவிலேயே இந்தப் பூகம்பம மையங்கொண்டிருந்தது. பூகம்பம் காரணமாகப் பல கட்டடங்கள் தரைமட்டமாகின; மின்சாரம் துண்டிக்கப்பட்டது; போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

பூகம்பம் ஏற்பட்ட ஆறு மணித்தியாலம் கழித்து மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டது என்று ஜப்பானிய அரச தொலைக்காட்சி கூறியுள்ளது.

அதிகாலை வேளையில் பூகம்பம் ஏற்பட்டதால், மக்கள் நித்திரையில் இருந்து விழித்தெழுந்து வெட்ட வெளிகளை நோக்கி ஓட்டமெடுத்தனர்.

ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு இடம்பெயர்ந்து வெட்ட வெளிகளில் தங்கியுள்ளனர்.

ஒரு தொகையினர் வேறு மாகாணங்களுக்குச் சென்றுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களுக்கு அரசு உடனடியாக நிவாரணங்களை வழங்கிவருகிறது.

தரையைத் தாக்கிய இந்தப் பூகம்பம் தற்போது கடலில் மையங்கொண்டுள்ளது. இதனால், கடல் அலைகள் மிக அதிகமான உயரத்திற்கு எழும்புவதைக் காணக்கூடியதாக உள்ளது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

குஷிரா என்ற நகரில் கடல் பகுதியில் சுமார் 2.3 மீற்றர் உயரத்திற்கு மேலெழுந்த அலையால் அப்பகுதி கிராமங்களுக்குள் கடல் நீர் புகுந்துள்ளது. அங்கு மழையும் பெய்து வருவதால் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது கடலில் மையங்கொண்டுள்ள பூகம்பம் மூர்க்கமடைந்து வருவதால் கடல் அலை பல மீற்றர் உயரத்திற்கு மேலெழும்பும் வாய்ப்பிருப்பதாகவும், இதனால் கடற் கரைகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் மக்களை அரசு எச்சரித்துள்ளது.

பூகம்பத்தின் காரணமாக ரயில் ஒன்று தடம்புரண்டதில் அதிலிருந்த நாற்பது பேர் படுகாயமடைந்தனர்.

டோமோகோமாய் நகரில் பூகம்பம காரணமாக வாயுக் குழாய்கள் உடைந்து பாரிய தீ விபத்தும் ஏற்பட்டுள்ளது.

இந்த நகரில் வீதிகள் இரண்டாகப் பிளந்துள்ளன. விமான நிலையங்கள சேதமடைந்துள்ளன. இந்த வருடம் இவ்வளவு சக்தி வாய்ந்த பூகம்பம் உலகின் எந்தப் பகுதியையும் தாக்கவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.



ஜப்பானில் பூகம்பத்தால் பெற்றோலியக் களஞ்சியம் தீப்பற்றி எரிகிறது.

# சீனாவில் மண்சரிவு

பெய்ஜிங்,செப்.27

சீனாவின் தென் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மண்சரிவினால் பன்னிரண்டு பேர் உயிரிழந்தனர்.


மலைகளைக் குகையாகக் குடைந்து அங்கு வாழ்க்கை நடத்தி வந்த பன்னிருவருக்கே இந்தப் பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண் சரிவு மலைக் குகைகளை மூடியது. இதனால், அவர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர்.

அவாகள் குகைகளுக்குள் புதையுண்ட விடயம் மறுநாள்தான் தெரிய வந்தது.

மீட்புப் பணியாளர்கள் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து புல்டோசர்கள் மூலம் மண்ணை அகற்றிச் சடலங்களை மீட்டனர்.

அப்பகுதியில் தொடர்ந்தும் மழை பெய்துவருவதால் அங்குள்ளவர்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகின்றனர்.



பூகம்பத்தால் சேதமுற்ற கல்லறைகள்

# தென்னந்தோட்டங்களைப் பார்க்க சென்ற உரிமையாளர்கள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.27

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமது தென்னந்தோட்டங்களைப் பார்வையிடச் சென்ற அவற்றின் உரிமையாளர்களது கணிசமான தோட்டங்கள் படைமுகாம் பகுதிக்குள் இருந்ததால், அவற்றைப் பார்வையிட முடியாது திரும்ப நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள எழுதுமட்டுவாழ், பளை, கரம்பான், கிளாலி போன்ற உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களை அவற்றின் உரிமையாளர்கள் சென்று பார்வையிடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர். தோட்டங்களுக்கு நஷ்டஈடு பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தோட்ட உரிமையாளர்கள் எடுத்த முயற்சி காரணமாகவே இந்த அனுமதி பெறப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதன்படி, கடந்த 20ஆம், 21ஆம், 22 ஆம் திகதிகளில் தென்மராட்சியில் உள்ள தென்னந்தோட்டங்களையும் 23ஆம், 24ஆம், 25 ஆம் ஆகிய திகதிகளில் பளைப் பகுதிகளிலுள்ள தென்னந்தோட்டங்களையும் பார்வையிடுவதற்கு பளை அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் அதன் உரிமையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆனால், அப்பிரதேசங்களில் கணிசமான தோட்டங்கள் முகாம்களுக்குள் அடங்கியிருந்ததாகவும் -

அதனால், அந்தத் தோட்டங்களை அவற்றின் உரிமையாளர்களால் பார்வையிடமுடியாது போனதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## மாடுகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏற்றப்படும் தினங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரையும் இப்பணி நடைபெறவுள்ளது. நாளைமறுதினம் திங்கட்கிழமை ஓட்டுமடம் சந்தி, மறுநாள் செவ்வாய்க்கிழமை நாயன்மார்கட்டு சனசமூக நிலையம், எதிர்வரும் 3ஆம் திகதி அரியாலை கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் -

எதிர்வரும் 7ஆம் திகதி திருநெல்வேலி பாற்பண்ணை, 8ஆம் திகதி கொழும்புத்துறை சனசமூக நிலையம், 10ஆம் திகதி நந்தாவில் அம்மன் கோயிலடி சனசமூக நிலையம் ஆகியவற்றிலும் தடுப்பூசி ஏற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-10)

## தொடர்ந்தும் தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கைகள்

வலி.மேற்கு,செப்.27

உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் பிரதேச செயலகங்களுக்கு தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கைகள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இதனால் அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலதடவைகள் சுட்டிக்காட்டியும் மேற்படி அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது (எ-175)

## கட்டுரைப்போட்டி

தெல்லிப்பழை,செப்.27

பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது. இதற்கான சுற்றறிக்கைகள் பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

'கற்பகதரு' எனும் தலைப்பில் இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் தரம் 8முதல் 10 வரையான மாணவர்கள் கனிஷ்ட பிரிவிலும், தரம் 11 முதல் 13வரையிலான மாணவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் கட்டுரைப் போட்டியில் பங்குபற்றலாம்.

மேற்படி கட்டுரைகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பனை அபிவிருத்தி சபை கோரியுள்ளது. (எ-150)

## முதியோர் தின நிகழ்வுகள்

வலிகாமம் தெற்கு,செப்.27

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா அடுத்தமாதம் முதலாம் திகதி புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறவுள்ளது.

உதவிப்பிரதேச செயலர் எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் விழா நடைபெறும்.

யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறைத் தலைவர் கலாநிதி சபா.ஜெயராசா இவ்விழாவில் பிரதம விருந்தினராகவும், கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கிராமசேவையாளர் பிரிவு ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட முதியவர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்படுவர்.(எ-152)

* * *

கொக்குவில்,செப்.27

கோப்பாய் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள முதியோர் தின விழா எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை மாலை 2.30மணிக்கு கோப்பாய் பிரதேசசெயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் இளைப்பாறிய அதிபர் கலாநிதி க.சொக்கலிங்கம் பிரதமவிருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம், நீர்வேலி ப.நோ.கூ.சங்க தலைவர் க.தகிருஷ்ணராஜா, கோப்பாய் லயன்ஸ் சங்கத் தலைவர் லயன் ஈ.பாலசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-76)

# கரணவாய் குளத்தின் புனரமைப்பு பணிகள் தற்காலிக இடைநிறுத்தம்

## கிரனேட் மீட்கப்பட்டதன் எதிரொலி

கரவெட்டி,செப்.27

கரணவாய் கிழக்கில் அமைந்துள்ள உச்சில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கரவெட்டி தெற்கு விவசாய சமமேளனத்தினால் மேற்படி குளத்தைப் புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வந்தன.

கடந்த புதன்கிழமை புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் குளத்தில இருந்து வெடிக்காத நிலையில் 'கிரனேட்' ஒன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து நெல்லியடி பொலீஸாருக்கும், படையினருக்கும் அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் அங்கு வைத்து 'கிரனேட்'டை செயலிழக்கச் செய்தனர். (எ-10-70)

## மகளிர் சங்கமம்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நடத்தவிருக்கும் இந்நிகழ்வில் பெண்களின் பிரச்சினைகள், தேவைகள் பற்றிய பல்வேறு விடயங்களும் ஆராயப்படவுள்ளன. (ஒ-6-86)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையும் அபிவிருத்திச் சங்கத்தின் நீண்டகால உறுப்பினருமாகிய

**செல்வி தனலெட்சுமி புண்ணியமூர்த்தி**

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசம்மா புண்ணியமூர்த்தி**

அவர்களின் மரணச் செய்தியைக் கேட்டு ஆழ்ந்த வேதனையடைவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.*

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(C/30380) (26-29-11-14)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி த.புண்ணியமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசம்மா புண்ணியமூர்த்தி**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து, இழப்பால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

*யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*

(C/30379) (29-11-14)

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.

## யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

**நூலகத் திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் 2003**

காலம் : 2003.09.28 ஞாயிறு காலை 09.00 மணி

இடம் : யா/பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை.

தலைவர்:
திரு.வே.துரைசிங்கம் (அதிபர்)

பிரதமவிருந்தினர்:
திரு.எம்.கே.சிவாஜிலிங்கம்
(கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு.சி.சிவராசா
(முன்னாள் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர், [illegible])

திரு.சி.புஸ்பலிங்கம்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்வி [illegible], பருத்தித்துறை)

திரு. [illegible]
(அரசியல்துறை [illegible], வடமராட்சி)

திரு. [illegible]தாஸ்
(கட்டடப் பரிசோதகர், [illegible] பணிமனை, வடமராட்சி)

திரு.பொ.சின்னத்தம்பி
(ஓய்வுபெற்ற வைத்தியர், பொலிகண்டி)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பா.அ.சங்.,
நலன்விரும்பிகள்.

(C/30374)(27-11-14-29)

## அறிவித்தல்

**கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகாசபை உறுப்பினர்களை இனம் காணுதல்**

மேற்படி விடயம் தொடர்பில் 25.09.2003 தினம் உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் வாபஸ் பெறப்படுகின்றது.

பெறுநர்,
(வே.நடராசா.)

(23033) (25-11-14-29)

## அறிவித்தல்

பொன்னுத்துரை பத்மசுந்தரம் ஆகிய எனது பெயரில் (வட மாகாணம்) யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து காணிகளின் உறுதிகள் (மாசி மாதம் 2003) கொழும்பில் களவுபோய்விட்டன. இது பற்றி கொழும்பு பொலீஸாரிடம் (19.02.2003) நடந்ததை முறையிட்டு தகவல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்றும் என் பெயரில் உள்ள யாழ்ப்பாணம் காணிகளை கவனிப்பதற்கும் அவற்றை மேற்பார்வையிட்டு பாதுகாக்கும் முழுப்பொறுப்புக் களையும், முழு அதிகாரத்தையும் (POWER OF ATTORNEY) எழுத்து மூலம் எனது தங்கையாகிய திருமதி தவராசா கமலாதேவி இருப்பிடம் 6/2, கண்டி வீதி, புறடி முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்பவருக்கு மட்டுமே கொடுத்துள்ளேன். ஆனால், எனது மனைவிக்கோ அல்லது வேறுயாருக்குமோ நான் எந்த விதமான அதிகாரங்களும் எழுத்து மூலம் கொடுக்கவில்லை என்பதை அறிவிக்கிறேன். தற்சமயம் எனது உறுதிகளை களவு செய்தவர்கள் கொழும்பில், நான் அவர்களுக்கு எழுத்து மூலம் எனது காணிகளை விற்பதற்கு முழு அதிகாரங்களையும் எழுத்தில் கொடுத்ததாக ஒரு பொய்யான (POWER OF ATTORNEY) பத்திரம் செய்துகொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். அத்துடன், எனது பெயரில் உள்ள காணிகளை விற்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள் என்பதையும் அறிந்தேன். ஆகவே, எவரும் என் பெயரிலுள்ள காணிகளை வாங்கவேண்டாம். அப்படி இல்லை என்று என் பெயரில் உள்ள காணிகளை வாங்கினால் அவர்களுக்கு மிகப்பெரிய பண நஷ்டம் ஏற்படும். அத்துடன், காணிகளை களவாக வாங்கியதற்கு அவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்படிக்கு,
பொ. பத்மசுந்தரம்

(23031) (29-11-14)

## மரண அறிவித்தல்

**திருமதி இராசம்மா புண்ணியமூர்த்தி**

சரவணை கிழக்கு, வேலணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா புண்ணியமூர்த்தி அவர்கள் நேற்று (26.09.2003) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய மாரிமுத்து - ஆறுமுகம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற புண்ணியமூர்த்தி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் மகேந்திரன் (ஜேர்மன்), தனலெட்சுமி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஆசிரியை), சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தங்கம்மா, மற்றும் செல்லம்மா, தம்பிராசா, மகாலிங்கம் (வவுனியா) ஆகியோரது அன்புச் சகோதரியும் வாசுகி, ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மாமியும் பிரசாந், வினோத், பிரீனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2003) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27, கோவில் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

(23032) (25-29-11-14)

தகவல்:
தனலெட்சுமி புண்ணியமூர்த்தி
(மகள்)

யசோ JASO

புத்துலகப் பிரவேசம்–2003

இடம்:வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம்: 27,28,29-09-2003
☎0777-110610

றபர் சீல்களை கண்காட்சியில்... 10% விசேட கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

சிவப்பு, பச்சை, நீலம், ஊதா, கறுப்பு முதலான பல வர்ணங்களில் றபர் சீல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

Jaso (PVT) LTD,
*35,கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/30378) (29-11-14)

# உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,செப்.27

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14, 16 வயதுப் பிரிவுகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், 18வயதுப் பிரிவில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் இவ்வாண்டுக்கான சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அண்மையில் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

18 வயது அணிகளுக்கிடையேயான போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் வசாவிளான் மகாவித்தியாலயமும் மோதின.

போட்டி ஆரம்பமான நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின.

இவ்விரு அணிகளும் தமக்கு கோல்களைப் பெற பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என எதிர்பார்த்த போதிலும் எந்த ஒரு சந்தர்ப்பமும் முதல் பாதி ஆட்டத்திலோ அன்றி இரண்டாம் பாதி ஆட்டத்திலோ கிடைக்கவில்லை. இதனால் கோல்களை இரு அணிகளும் பெறவில்லை. மேலதிகமாக வழங்கப்பட்ட பத்து நிமிடத்தில் இரு அணிகளும் சிறப்பாக விளையாடிய போதும் கோல்கள் பெறும் வாய்ப்பு இல்லாது போய்விட்டது.

இறுதியில் சமநிலையை உடைப்பதற்காக 'பினால்டி' உதைகள் வழங்கப்பட்ட போது யூனியன் கல்லூரியினர் இதனை சரியான முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

ஆனால், வசாவிளான் மத்திய மகாவித்தியால மாணவர்கள் சரியான முறையில் பயன்படுத்தி 4-1 என்ற கணக்கில் வெற்றியை தமதாக்கிக் கொண்டனர்.

16வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

விளையாட்டு தொடங்கிய சில நிமிடங்களில் இளவாலை மெய்கண்டான் அணி ஒருகோலை அடித்து முன்னணியில் இருந்தது.

அடுத்த சில நிமிடங்களில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீரர் ஒரு கோலை அடித்தார்.

தொடர்ந்து மெய்கண்டான் அணி வீரர்கள் தொடர்ச்சியாக பந்துகளை கோல் நோக்கி செலுத்துவதில் மிகவும் விறுவிறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதேநேரம் முதல்பாதி ஆட்டம் முடிவடைவதற்கு சிலநிமிடம் இருக்கும்போது இளவாலை மெய்கண்டான் வித்தியாலய வீரர் ஒருவர் இலகுவாக கோல் பெறும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார். இத்துடன் முதல் பாதி ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய ஏழாவது நிமிடம் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீரர்கள் நிலைகளை மாற்றி விளையாடத் தொடங்கினார்கள். இதனை அருணோதயா வீரர்கள் பயன்படுத்தி இரண்டாவது கோலை மையப்பகுதியில் இருந்து சிலயார்கள் முன்வைத்து அடித்துக் கோலைப் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து மேலும் 5கோல்களை மிகவும் இலகுவான முறையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

ஆட்ட முடிவில் 7-1என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தை மிகவும் இலகுவாக வெற்றிகொண்டது.

14 வயதுப் பிரிவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இவ்வயதுப்பிரிவில் மிகவும் திறமையான அணியாக அருணோதயாக் கல்லூரி அணி ரசிகர்களினால் கொள்ளப்பட்டபோதிலும், மகாஜனக் கல்லூரியை இலகுவாக வெற்றி பெற முடியவில்லை.

முதல்பாதி ஆட்டத்தில் அருணோதயாக் கல்லூரி ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் அருணோதயாக் கல்லூரி கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டபோதிலும் அலைபாயும் மகாஜனக் கல்லூரி வீரர்களினால் தடுத்து முறியடிக்கப்பட்டன.

இறுதியில் 1-0 என்ற கோல்கணக்கில் அருணோதயாக் கல்லூரி மகாஜனக் கல்லூரியை வெற்றிகொண்டது. (ஓ-5-86)

★ ★ ★

வலிகாமம் தெற்கு, செப்.27

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக்கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்கள்:-

**16 வயதுப் பிரிவு:-**

காலை 8.30 மணி- புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

காலை 9.00 மணி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் இணுவில் இந்துக்கல்லூரி.

**18 வயதுப் பிரிவு**

பிற்பகல் 2 மணி- வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் எதிர் புனித ஹென்றியரசர் கல்லூரி.

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்கள்-

**16 வயதுப் பிரிவு:-**

காலை 8.00 மணி- கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

முற்பகல் 9 மணி- அராலி இந்துக் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

பிற்பகல் 2 மணிக்கு - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

பிற்பகல் 2.30 மணி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி

(ஓ-5,152)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.27

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி ரீதியில் நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் 30க்கு மேற்பட்ட கழகங்களின் அணிகள் பங்குபற்றவுள்ளன.

இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு :

பிற்பகல் 3.30 மணி யங்லயன்ஸ் வி.க அணி எதிர் வதிரி டயமன்ஸ் வி.க 'ஏ' அணி.

பிற்பகல் 4.30 மணி- வல்லை ஆதிசக்தி வி.க அணி எதிர் சென்.தோமஸ் வி.க அணி (ஓ-5)

# பாகிஸ்தான் அணிக்கு இன்ஸமாம் தலைவர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக இன்ஸமாம் உல்ஹக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை தலைவராக இருந்த ரஷீட் லத்தீவ் கடந்த புதன்கிழமை இராஜினாமாச் செய்தார். அதையடுத்து இன்ஸமாம் புதிய தலைவராக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

ரஷீட் லத்தீவ்வின் இராஜினாமா தொடர்பாக பாக். கிரிக்கெட் சபைத் தலைவர் தாகிர் ஸியா, பிரதம நிறைவேற்று அதிகாரி ரமீஸ் ராஜா, தேர்வுக் குழுத்தலைவர் அமீர சொஹைல், அணியின் பயிற்றுநர் ஜாவிட் மியாண்டட் ஆகியோர் நேற்று முன்தினம் ஆராய்ந்தனர்.

"லத்தீவ்வின் இராஜினாமாவை ஏற்றுக்கொள்வது மிகக் கடினமானதொரு தீர்மானமாகும். ஏனெனில், உலகக் கிண்ணத்தொடரின் பின்னர் இளம் பாக். அணிக்கு அவர் மிகுந்த பங்களிப்பை வழங்கியிருந்தார்."

-இவ்வாறு தாகிர் ஸியா தெரிவித்துள்ளார்.

"தலைவர் பதவி தொடர்பாக இன்ஸமாமுடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினேன். பாக். கிரிக்கெட் சபை இன்ஸமாம் மீது நம்பிக்கை கொண்டுள்ளது" எனவும் ஸியா கூறினார்.

34 வயதான லத்தீவுக்கு அண்மையில் 5 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டது. அதனால், பங்களாதேஷுடனான போட்டிகளின் போதும் இன்ஸமாம் உல்ஹக தலைவராக பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து மற்றும் அணிகளுடனான போட்டிகளின் போது இன்ஸமாம் பாக். அணிக்குத்தலைமை தாங்கவுள்ளார்.

கடந்த உலகக்கிண்ணத் தொடரின் பின் அணியிலிருந்து நீக்கப்பட்ட 8 வீரர்களில் இன்ஸமாமும் ஒருவர். பங்களாதேஷுடனான டெஸ்ட் போட்டிகளின்போதே அவர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார். அத்தொடரின் இரண்டாவது டெஸ்டில் பாக். அணியின் தோல்வியைத் தவிர்ப்பதற்கு அவர் முக்கிய பங்காற்றினார்.

# உதைபந்தாட்ட வரிசையில் பிரேஸில் தொடர்ந்து முதலிடம்

சர்வதேச உதைபந்தாட்ட அணிகளின் தரவரிசையில் பிரேஸில் அணி தொடர்ந்தும் முன்னணியில் உள்ளது.

புதிய கால்பந்தாட்டத் தரவரிசையை சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் (FIFA) கடந்த புதனன்று வெளியிட்டது.

இப்பட்டியலில், உலக சம்பியனான பிரேஸில் அணி 855 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ் இரண்டாமிடத்திலும் ஸ்பெயின் மூன்றாமிடத்திலும் உள்ளன. ஆர்ஜென்ரீனா 6ஆவது இடத்திலிருந்து 4ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. மெக்ஸிகோ 5ஆவது இடத்தில் உள்ளது.

அண்மையில், மெசிடோனியா, லைசென்ஸ்ரீன் அணிகளைத் தோற்கடித்த இங்கிலாந்து, 8ஆவது இடத்திலிருந்து 6ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஐரோப்பிய கிண்ணப் போட்டியொன்றில் செக் குடியரசிடம் தோல்வியுற்ற நெதர்லாந்து 4ஆவது இடத்திலிருந்து 7ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. துருக்கி 7ஆவது இடத்திலிருந்து 8ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. செக்குடியரசு, ஜேர்மனி ஆகியன 9ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளன. அமெரிக்கா 11ஆவது இடத்தில் உள்ளது.

# சஞ்சீவன் ஞாபகார்த்த கிரிகெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ்.மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் நடத்தும் சஞ்சீவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மென்பந்து சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றது.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★காலை 8.30 மணி -உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் புங்குடுதீவு ம.வி.

★முற்பகல் 10மணி- கனகரத்தினம் ம.வி. எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

★முற்பகல் 11.30 மணி - கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

★பிற்பகல் 2மணி - நாவற்குழி ம.வி எதிர் புனித ஜோசப் வித்தியாலயம். (ம-3)

# விளையாட்டுத்துறையில் விரைவில் உயர்கல்வி!

"விளையாட்டுத்துறையில் உயர் கல்வி முறையொன்றை ஏற்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. விரைவில் இந்தமுறை நடைமுறைக்கு வரும்".

- இவ்வாறு கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

அகில இலங்கை பாடசாலை மெய்வன்மைப் போட்டிகளின் ஆரம்ப வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறும் இப்போட்டிகள், எதிர்வரும் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் உரையாற்றுகையில், 'எமது நாட்டில் போட்டி முறையிலான கல்வி அமைப்பு காணப்படுவதால், மாணவர்கள் விளையாட்டில் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. பாடசாலைக்கல்வியின் பின் உயர்கல்வி கற்பதுபோல், விளையாட்டுத் துறையிலும், உயர் கல்வி முறையொன்று உருவாக்கினால் விளையாட்டின் பால் மாணவர்கள் ஆர்வத்தை அதிகரிக்கலாம்' என்றார்.

கௌரவ அதிதியாக கலந்து கொண்ட மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே உரையாற்றுகையில், 'அனைத்து இன மக்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுவதற்கு இவ்வாறான விளையாட்டு விழாக்கள் பெரிதும் துணைபுரியும்.

'வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலிருந்து வந்த மாணவ மாணவியர் தென்பகுதி மாணவ, மாணவியருடன் வெற்றி தோல்விகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். இதன் மூலம் சிறந்த புரிந்துணர்வு ஏற்படும்' - என்றார்.


## தவறிவிட்டது

கீதபொன்கலன் பிரசாத் என்பவரின் (தேசிய அ.அ. 812444172V), முகமாலைப் பிரவேசபத்திரம், சிறுதொகை பணத்துடன் 26.09.2003 மாட்டின் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் (போ. மரியநாயகம் (பாலா) 12, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம், என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (23040) (29-11-17)

## யாழ். மத்திய கல்லூரி
### புதிய அனுமதி - 2004

தரம் 01, தரம் 06 ஆகிய வகுப்புக்களுக்கு அனுமதி கோரும் மாணவர்கள் சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப 4 மணிவரை கடமை நேரத்தில் கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15.10.2003

நேர்முகத் தேர்வு/அனுமதித் தேர்வுத் திகதிகள் விண்ணப்பதாரிகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு:

ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் வகுப்பில் வெற்றிடங்கள் இன்மையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(C/30388) அதிபர்.


## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை நாகரத்தினம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை நாகரத்தினம் அவர்கள் நேற்று (26.09.2003) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் பாசமிகு கணவரும் சத்தியதாசன் (குமரன் றூறிஸ்ட் - யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (பிரான்ஸ்), சத்தியபாலன் (கிளை முகாமையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி), சாந்தினி (கொழும்பு), வதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அப்பாத்துரை - ஆசைப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை-செல்லாச்சி தம்பதியினரின் மருமகனும் விக்னேஸ்வரன் (A.C.S மெஸ்கலெக்ஸ், கொழும்பு), வாகவன் (பிரான்ஸ்), தவமணி (ஆசிரியை ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை), ரஜனி ஆகியோரின் மாமனாரும் டிலக்ஷன், டிலோசன், தர்சன், அனுஜன், தர்சிகா, கௌசிகா, நிஷாந்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2003) சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய். (23043) (29-11-17)

தகவல்:
நா.சத்தியதாசன்
நா.சத்தியபாலன் (மகன்மார்)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (பாலா)

(ரவ்தாஸ்ஸ்டோர்ஸ் மனேச்சர், பெருமாள் கோவிலடி)

யாழ்ப்பாணம், பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கரம்பன் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கல்வியங்காட்டில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 26.09.2003 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும் கந்தையா - தனலட்சுமி (ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல சோதிடர், கரம்பன்) தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாவல்லியின் (நூலகர் மாநகரசபை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் திருமதி மனோன்மணி பரமலிங்கம், மாலினி (லைடன் புடைவையகம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச் சகோதரரும், பரத்துவாசன் (அனலைதீவு), முகிந்தன் (பிரான்ஸ்), இளங்கோவன் (உடையார்கட்டு), பரமலிங்கம் ஆகியவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலாவல்லி (மனைவி)

8, இராசா வீதி, கல்வியங்காடு, நல்லூர். (23042) (29-11-17)

### செல்வி கயிலாயநாதன் விஜயலட்சுமி

(இணுவில் கிழக்கு)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த கயிலாயநாதன் விஜயலட்சுமி 26.09.2003 வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கயிலாயநாதன் - மீனாட்சி தம்பதிகளின் புதல்வியும் பரமேஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலிகாமம் பிரதேச சபை, கொடிகாமம்), முன்னாள் சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்), யோகநாதன் (கரக்கரை மாளிகை, சுன்னாகம்), இராசசேகரன், பூரணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (28.09.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் கிழக்கு, இணுவில். (23041) (29-11-17)

தகவல்:
க.பரமேஸ்வரன் (சகோதரன்)

### பொல்லுகள், கொட்டன்கள் சகிதம்

# யாழ்.பல்கலையில் நேற்றிரவு மாணவர் குழுக்கள் மோதல்

## முதலாம் வருட மாணவன் ஒருவன் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,செப்.27

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்றிரவு இரு மாணவர் குழுக்களுக்கிடையில் திடீரென ஏற்பட்ட மோதலில் கலைப்பீட முதலாமாண்டு மாணவன் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மோதலால் பரமேஸ்வராச் சந்திப்பகுதி இரவு 7.30 மணிமுதல் சுமார் 3 மணி நேரத்துக்கு ஏரே களேபரமாகக் காட்சியளித்தது. பல்கலைக்கழக வளாகத்துக்குள் கொட்டன்களை ஏந்தி நின்ற மாணவர்களையும் காண முடிந்தது.

யாழ்பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கிடையில் கடந்த சில தினங்களாக நிலவி வந்த முறுகல் நிலைமை நேற்று உச்சக்கட்ட மோதலாக வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

கலைப்பீட முதலாம் ஆண்டு மாணவர்கள் சிலர் வெளியாள்களை பல்கலையில் கற்காதவர்கள் கொண்ட குழுவொன்றுடன் பொல்லுகள் மற்றும் கொட்டன்கள் சகிதம் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தனர் என்றும இடைமறித்த பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கி விட்டு உள்நுழைந்த அக்குழுவினர் வளாகப் பிரதேசத்தில் நடமாடிய கலைப்பீட சிரேஷ்ட மாணவர்களைத் தேடித்தேடித் தாக்கத் தொடங்கினர் என்றும் -

இதனையடுத்தே அங்கு மோதல் உருவானது என்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

திடீரென அங்கு அதிகளவில் கூடிய சிரேஷ்ட மாணவர்கள் தாக்குதலில் ஈடுபட்ட முதலாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் வெளியிலிருந்து வந்தவர்கள் என்று 25 பேரை துரத்தித் தாக்கியதுடன் அவர்களை மடக்கிப் பிடித்தனர்.

வளாகத்தில் ஆரம்பித்த மோதல பல்கலைக்கழக விடுதிக்கும் பரவியது. அங்கும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

சிரேஷ்ட மாணவர்களால் பிடிக்கப்பட்ட 25 பேரும் நேற்றிரவு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டதாக மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

மோதல்கள் இடம்பெற்ற தகவல் கிடைத்ததும் பல்கலை ஒழுக்காற்றுக குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மோதலில் காயமடைந்த கிளி நொச்சியைச் சேர்ந்த ரஜனி என்னும் மாணவன் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9-8)

### இரு குறும்படங்களின் வீடியோக் காட்சிகள்

யாழ்பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 'தீண்டத்தகாத நாடு', 'ஒரு நதியின் மரணம்' ஆகிய இரண்டு குறும்படங்கள வீடியோக் காட்சியாக காண்பிக்கப்படவுள்ளன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த குறும்பட இயக்குநரான ஆர்.ஆர்.சீனிவாசனின் 'தீண்டத்தகாத நாடு' எனும் குறும்படம் 2001ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற சர்வதேச இன ஒதுக்கலுக்கு எதிரான மாநாட்டில் காண்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டதாகும்.

'ஒரு நதியின் மரணம்' என்னும் குறும்படம் தமிழகத்தின திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரபரணி ஆற்றில் 1999 ஆண்டில் 17 தலித் மக்கள் படுகொலை செய்யப்பட்டதைப்பொட்டி தயாரிக்கப்பட்டதாகும்.

குறும்பட இயக்குநர் ஆர்.ஆர்.சீனிவாசனும் இந்த வீடியோக்காட்சியின் போது நேரில் சமூகமளிக்கவுள்ளார். (எ-10)

### முழுக்கடைநாளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களங்கள் இயங்கியபோதும் அங்கு வருகைதந்த பொதுமக்கள் மிகக் குறைவாகவே இருந்தது.

பாடசாலைகள் இயங்கிய போதும் மாணவர்கள் வரவு கணிசமானதாகவே இருந்தது. தனியார் கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பன நேற்று முழுநாளும் இயங்கவில்லை.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்வண்டிகளும், தனியார் சிற்றூர்திகளும் மட்டுப்படுத்தப் பட்ட அளவிலேயே சேவையில் ஈடுபட்டன. அவற்றில் பயணித்தோர் தொகை மிகக் குறைவாக இருந்தது. இதனால் யாழ். பஸ் நிலையம் உட்பட நகரப்பகுதியே வெறிச்சோடிக் காணப்பட்டது.

வைத்தியசாலைகள் இயங்கிய போதும் நோயாளர் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.(ம-5)

### இந்தியா தனது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் எமது மக்களுடைய சுதந்திர வேட்கையும், அரசியல் அபிலாஷைகள் மீது அவர்கள் கொண்டிருக்கின்ற தெளிவான போக்கையும் அவதானிக்கின்ற இந்தியா, தனது அணுகுமுறைப் போக்கை மாற்றி எமது அரசியல் அபிலாஷைகளுக்கு இன்றைய சூழ்நிலையில் மதிப்பளிக்க வேண்டும் அதை எமது மக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

எமது மக்களுடைய பற்றுறுதியை இந்தியா நேரடியாகச்சந்தித்தது. எங்கள் மீது பெரும் படைப்பலத்தைக் கொண்டு போரை நடத்திய சிங்கள அரசைத் தோற்கடித்து இராணுவ பலத்தை சமமாகக் கொண்டிருக்கின்ற எமது மக்களுடைய சுதந்திர வேட்கையையும் அரசியல் அபிலாஷைகளையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும். நாங்கள் இந்தியாவுக்கு நேச சக்திகள்.

உலகியல் இராணுவ அரசியல், ராஜதந்திரப் போக்குகளோடு தான் ஒவ்வொரு நாடும், அரசும் தன் போக்கை அமைத்துக் கொள்கிறது. அந்த அடிப்படையிலேயே - சர்வதேச எதிர்பார்ப்புக்களுக்கு மதிப்பளித்து - இன்று எமது அரசியல் நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கிறோம்.

உலகிலே அரசியல் இராணுவ ராஜதந்திரப் போக்கைக் கடைப்பிடிப்பதிலே தலைவர் பிரபாகரன் முதன்மை வகிக்கிறார் என அண்மையில் வெளிவந்த சஞ்சிகை ஒன்று தெரிவிக்கிறது.

இன்று எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக எமது மக்களே உள்ளனர். இத்தகைய ஒரு வரலாற்றுக் கட்டத்தை எமது தலைவர் ஏற்படுத்தியுள்ளார். எமக்குச் சரியான தலைமைத்துவம், பற்றுறுதி கொண்ட மக்கள், வலிமையான விடுதலை இயக்கம் என்பன அமைந்துள்ளன.

இதனாலேயே இன்று நாம் சர்வதேசரீதியில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளோம். இந்த அடிப்படையில் எமது போராட்டத்தின் அடுத்தகட்டம் வெற்றி என்பதாகத்தான் இருக்க முடியும். இதனைத் திட்டவட்டமாகக் கூறிவைக்கவிரும்புகிறேன்.

எமது தேசியத் தலைவர் தனது எண்ணத்தின்பால் ஒவ்வொரு மக்களுடைய சமூக, அரசியல், பொருளாதார மேம்பாட்டையும் கருத்திற் கொண்டு ஒரு நாட்டுக்கான கட்டுமானங்களை எமது பகுதிகளில் ஏற்படுத்தியுள்ளார்.

எமது மக்கள் அனைவரும் விழிப்புடனும், தெளிவுடனும் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் யாரும் எங்களைக் கையாளமுடியாது - இப்படி சி.இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (ம-9)

### மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க உறுப்பினர் எனவும் பின்னர் வரதர் அணியில் இணைந்து செயற்பட்டார் என்றும் கூறப்படுகிறது. அரச வைத் தியசாலையில் அண்மைக்காலமாக ஆய்வுகூட ஊழியராகச் சேவையாற்றிய இவர் வீட்டு வாசலில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.


கணனிப் பாடநெறிகள்

Diploma In Desk Top Publishing
- Introduction to Computer
- Introductions to DTP
- Adobe Page Maker 7
- Corel Draw 11
- Adobe Photo Shop 7
- MS Publisher 2000

காலம் 6 மாதங்கள்

Diploma in Computer Studies
- Introduction to Computer
- MSDOS
- Windows 98/2000/xp
- Programming Techniques
- Programming Using C++
- Micro Soft office XP
- Programming Using Visual Basic
- Programming Project Using VB 6.

காலம் 6 மாதங்கள்

Computer Hardware
- Introduction to Computer
- MSDOS
- Windows 98/2000/xp
- Computer Assembling
- Installing Software
- Maintenance of Computer

காலம் 4 மாதங்கள்

Other Courses
- 3D Animations in Maya 4.5
- HTML
- விபரங்களுக்கு: (23012)

IMS
Institute of Micro Systems
Market Lane, Manipay.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
சரளமாக உரையாட
புதிய பிரிவு சிங்களம்
★By:லீலாக்கிருஸ்ணன்
இன்று ஆரம்பம்:27-09-2003
Sat .-3.00 p.m.(O.T) (12-)
(22984)

CHEMISTRY
ENTRE
Temple Road, நல்லூர்
PHYSICS DAY CLASS
★1973 முதல் 2003 வரையான 30 வருடத்திற்க மேற்பட்ட வினாவிடை
★வாரத்தில் 8 மணித்தியால வகுப்பு
ஆரம்பம்: 27.09.2003
Sat,7a.m.
Sat.,Sun., 7-9 a.m.
By:யோகானந்தா
(C-30367)

CHEMISTRY
GROUP CLASSES
DIAS
B.Sc.(Hons) Spl.Chem.
அலகுரீதியான,முழுமையான மீட்டல் வினாவிடை.
74, Palaly Rd.,Thirunelvely.
(23025) (12-)

CHEMISTRY
GROUP CLASSES
By: VAKEESAN
துரித மீட்டல் & வினா விடை
Mon., Fri. / Wed., Sun. 6.30 p.m.
ஆரம்பம்: 28.09.2003 6.30 p.m.
2005 வெப்ப இரசாயனம்
Tue. / Thu. / Sat. 6.30 p.m.
ஆரம்பம்: 30.09.2003 6.30 p.m.
★வாரத்திற்க 8 மணித்தியால வகுப்பு.
★மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை,
மதவடி வீதி, சுதுமலை வடக்கு,
khd ggha T.P:071-2386450


# தந்தையின் சிரார்த்த தினத்தில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை

## பாதுகாப்புக் காரணங்களுக்காகவாம்

ஹொரகொல்லவில் அமைந்துள்ள எஸ்.டபிள்யூ.பண்டாரநாயக்கவின் சமாதியில் நேற்று நடந்த அவரது சிரார்த்த தின நிகழ்வில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றவில்லை.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், இறுதி நேரத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவின் வருகை ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பண்டாரநாயக்கவின் மகனான அநுரபண்டாரநாயக்க, மகளான சுனேத்திரா, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்த மற்றும் சுதந்திரக் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் பங்குபற்றினார்கள்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் சிரார்த்த தினமும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (ம-3)

### ஐ.நா.சபையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது பலரது கருத்து. எனினும், அது குறித்து பிரேரணை சமர்ப்பிக்கப் பலரும் பின்னடிக்கிறார்கள்.

செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியது போல நடைமுறைப் பிரச்சினைகள் எல்லைக் கோடுகளுக்குள் அடங்குவதில்லை. ஆயுதப்பெருக்கம், சூழல் பாதிப்பு, உலகளாவிய பயங்கரவாதம் என்பன இன்று எங்கும் வியாபித்திருக்கின்றன.

பொதுவாக நாங்கள் முகம்கொடுக்கும் சவால்களுக்கு ஜனநாயக ரீதியில் கலந்துபேசி சுமுகமான தீர்வு காண்பதற்கு உரிய பொது மேடையாக - கேந்திர நிலையமாக - ஐ.நா.சபை இருக்கிறது. அதற்கு ஏற்றவகையில் புதிய வியூகங்களை வகுத்து சபை செயற்படவேண்டும். அதற்கு மீளமைப்புத் தேவை. இப்படி பிரதமர் கூறியே மீளமைப்புப் பிரேரணையை முன்மொழிந்தார்.

ஐநாவின் மாநாட்டில் உரை நிகழ்த்திய பிரதமர் ரணில், சமாதான முன்னெடுப்புக்களின் முன்னேற்றம் பற்றிக் குறிப்பிட்டார். நேற்றைய உரையில் அவர் சமாதான நடவடிக்கைகளின் போது முகம்கொடுக்க வேண்டியுள்ள பிரச்சினைகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள ஆர்வம் பற்றியும், நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு வழங்கும் நிதி உதவி பற்றியும் நன்றியுடன் அவர் குறிப்பிட்டார்.

### கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி மற்றும் தாக்குதல் காரணமாக மரணமானார்.

இந்தச்சம்பவம் தொடர்பான விசாரணையை நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான், கடற்படைச் சிப்பாயின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

அத்துடன், சம்பந்தப்பட்ட, தண்டனையை நிறைவேற்றிய அதிகாரிகள் மீது வழக்குத்தாக்கல் செய்யும்படி பொலீஸாருக்கு உத்தரவு வழங்கினார்.

### தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் இசைக்குழுவின் முன்செல்ல நினைவுதின ஊர்வலம் ஆரம்பமானது. இசைக்குழுவைத் தொடர்ந்து திலீபனின் நினைவூர்தி சென்றது. அதன் பின்னே பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் சென்றனர். ஊர்வலம் நல்லூர் வடக்கு திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தை அடைந்தது.

அங்கு திலீபன் நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. அருகே நினைவு தின நிகழ்வுகளுக்கான மேடையும், நிகழ்வில் பங்கேற்போர் அமர கொட்டகைகளும் அமைக்கப்பட்டிருந்தன. திலீபன் நினைவுப் பந்தலில் பொதுச் சுடரினை நல்லூர் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள், யாழ் பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவஞானசேகரம், கோப்பாய்ப் பிரதேச எழுச்சிப்பேரவை செயலாளர் சிவகடாச்சரம் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை யாழ் மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் நிசாந்தன் மாஸ்ரர் ஏற்றினார். தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மலர் மாலை அணிவித்தார். மதகுருமார், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் தியாகிக்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து, உண்ணாவிரதத்தினை மாமனிதர் அரசரத்தினம் ஆரம்பித்துவைத்தார். இதேவேளை, நினைவுரைகள், கவிதாஞ்சலி என்பன தொடர்ந்து இடம்பெற்றன. அரங்க நிகழ்வுகள் காலையில் நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பாலா மாஸ்ரர் தலைமையில் நடைபெற்றன.

திலீபன் நினைவு தினத்தை யொட்டி நல்லூர் வீதிகள் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. முக்கிய சந்திகளிலும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆலய வடக்கு மற்றும் கிழக்கு வீதிகளில் மக்கள் அமர்ந்து அரங்க நிகழ்வுகளைப் பார்வையிட்டனர்.

பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.சிற்றம்பலம், சர்வேஸ்வரக் குருக்கள் உட்பட பலர் நினைவுரையாற்றினர்.

10.48 மணிக்கு திலீபன் உயிர் நீத்தநேரத்தில் அனைவரும் எழுந்து நின்று அகவணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து மாணவர்களின் பேச்சு, கவிதை, நடனம், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பிற்பகல் 2 மணிக்கு மாவீரர் மேஜர் ரஞ்சனின் தந்தையார் க.தம்பிராசா நீராகாரம் வழங்கி உண்ணாநோன்பினை நிறைவு செய்தார்.

வலிகாமம் பிரதேசங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள நேற்றைய இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம் பகுதிகளிலும் நேற்று தியாகி திலீபனின் நினைவு தினம் வெகு சிறப்பாக உணர்வெழுச்சியுடன அனுஷ்டிக்கப்பட்டது. ஆங்காங்கே ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இடங்களிலும் அடையாள உண்ணாவிரதங்களும் இடம்பெற்றன. (ம)


## மரண அறிவித்தல்

### கணபதி கந்தசாமி

மானிப்பாய் வடகிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கந்தசாமி நேற்று (26-09-2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குணலட்சுமியின் அன்புக் கணவரும் விஜித்தா(சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), நர்மதா (ஆசிரியை, புனித சபரியார் பெண்கள் கல்லூரி- மன்னார்), நிவேனிதா (மாணவி, இராமநாதன் கல்லூரி), விஜிதரன்(மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கணபதி-அன்னம் தம்பதிகளின் மகனும் சுப்பிரமணியம், மனோன்மணி இராசதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.09.2003) சனிக்கிழமை பிப. 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.* (23044)(29-11-14-17) - தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.